ISSN 1391-9504

# Vijey விஜய் விஜய்

28-06-2006 - மலர் 03, இதழ் 16



## கண்கவரும் மயிலழகு

## கால்பந்தாட்ட தோழர்கள்

## மர்மக் கடல் பெர்மியூடா

பத்திரிகை உருவாக வழிகாட்டிய வர்த்தமானி

விலை ரூபா 10/=

பன்முக அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

** குடிநீரை சூடாக்கும்போது விறகு அடுப்பினில் சூடாக்குவதை விட, மின்சாரத்தில் பாவிக்கப்படும் பிலமன்ட் அல்லது கொயில் கொண்டு சூடாக்குவது விரயத்தைத் தடுப்பதுடன் நன்மை பயப்பதாகவும் அமைகின்றது என ஏன் கூறப்படுகின்றது?



பிலமன்ட் அல்லது கொயிலை நீருள்ள பாத்திரத்தினுள் வைத்தவாறே மின்சாரத்தை இயங்கச் செய்வதால் அது சூடாகின்ற அதேவேகத்தில் நீரும் சூடாகின்றது. இதனால், அதன் வெப்பமானது வெளிப்பகுதிக்கு விரயமாவது தவிர்க்கப்படுவதால், விரைவாகவே நீரும் கொதித்துவிடும். மேலும், விறகு அடுப்பை பாவிப்பதன் மூலம் ஏற்படுகின்ற புகை வெளியேறுதல், கரிபடிதல் போன்றன இதன்மூலம் தவிர்க்கப்படுவதோடு, விறகு எரிகையில் வெளியிடப்படுகின்ற காபனீரொக்சைட் வாயு போன்ற சூழல் மாசடையும் காரணிகளும் இதன் மூலம் தவிர்க்கப்படுகின்றது.

** உடற் காயங்களைச் சுத்தப்படுத்துவதற்கென 'ஸ்பிரிட்' என்ற திரவத்தைத்

## ஏன்? எப்படி?

தடவும்போது அந்த இடத்தில் ஒருவித குளிர்ச்சியாக இருப்பதுண்டு. ஏன் இவ்வாறு நிகழ்கின்றது?



பொதுவாகவே எந்தவொரு நீர்த்தன்மை வாய்ந்த எதுவுமே இலகுவாக ஆவியாகக் கூடியனவே. எனினும், காயங்களில் கிருமிகளை நீக்கிச் சுத்தப்படுத்துவதற்கெனப் பாவிக்கப்படுகின்ற 'ஸ்பிரிட்'டானது கிருமிகளை அழித்த பின்னரும் அந்த நீர்த்தன்மையானது தொடர்ந்தும் காயத்தில் படிந்திருந்தால் அந்தக் காயம் அழுகி விடக்கூடும். ஆகையால், மேற்படி 'ஸ்பிரிட்' காயத்தில் படிந்து விடக்கூடாதவாறு உடனடியாகவே ஆவியாகி விடக்கூடிய தன்மை கொண்டதாகவே தயாரிக்கப்படுகின்றது. எனவே, 'ஸ்பிரிட்' ஆவியாகும்போது அப்பகுதியில் நமது உடம்பில் காணப்படுகின்ற பொதுவான நீர் தன்மையையும் உடனடியாக உறிஞ்சிக் கொண்டே ஆவியாகின்றது. இவ்வாறு உடம்பிலுள்ள நீர்த்தன்மையும் உறிஞ்சப்படுவதால் தான் ஒருவித குளிர்ச்சித்தன்மையை உடல் உணர்கின்றது.



# இலக்கியச் சோலை

தயாரிப்பு - நவசீலன்

# அரக்கனிடமிருந்து தானம்

அகத்தியருடன் வனம் போய்ச் சேர்ந்த லோபாமுத்திரை அநேக விரதங்களைப் பிடித்தும், முனிவருக்கு பணிவிடைகள் செய்தும் அவரின் அன்பைப் பெற்றாள்.

ஒருநாள் அகத்தியர் லோபாமுத்திரையை அன்புடன் அருகில் அழைத்தார். லோபாமுத்திரை பெண்களுக்கே உரிய இயற்கையான நாணம் மேலிட முனிவரைத் தலைவணங்கிக் கைகூப்பினாள். பின்னர், "சுவாமி, நான் தங்களின் அன்பைப் பெற்றதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். ஆனாலும், எனது ஆசையையும் தாங்கள் நிறைவேற்றி வைக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறேன்" என்றாள்.

அவளுடைய பணிவிடை, சீலம், சௌந்தர்யம் ஆகியவற்றால் மிகவும் கவரப்பட்ட அகத்திய முனிவர் "அப்படியே செய்கிறேன், உனக்கு என்னவேண்டும் கேள்" என்றார்.

"என் தந்தையின் மாளிகையில் நான் அனுபவித்த செல்வங்கள் போன்று இங்கும் பெற்று வஸ்திர ஆபரணங்கள், ஆடை அணிகலன்கள் அணிந்து அத்துடன் தாங்களும் அவ்வாறே அணிந்து நாம் இருவரும் சந்தோசமாக இருக்கவேண்டும் என்பதே என் ஆசை" என்று கூறினாள் லோபாமுத்திரை.

"நீ சொல்வது போலச் செய்ய எனக்குச் செல்வம் ஏது? வாய்ப்பு ஏது? நாம் இருவரும் வனத்தில் வாழும் தரித்திரர்கள் அல்லவா?" என்று கேட்டார் அகத்தியர்.

"சுவாமி, தாங்கள் தவப் பயனால் எல்லா வல்லமையும் படைத்தவர். ஒரு நிமிடத்தில் உலகில் உள்ள அனைத்து செல்வங்களையும் பெறக்கூடியவராயிற்றே" என்று கேட்டாள் லோபாமுதிரை.

"உண்மைதான். ஆனால், நான் அவ்வாறு சம்பாதித்தால் அது என் தவத்தின் பயனை அழித்துவிடுமே. அது உனக்கு விருப்பமா?" என்று கேட்டார் அகத்தியர்.

"அதை நான் விரும்பவில்லை. தவத்தைச் செலவழிக்காமல் போதிய தனத்தை எங்கிருந்தாவது சம்பாதித்துக் கொண்டு வரவேண்டும். அதுதான் என் விருப்பம்" என்று கூறினாள் லோபாமுத்திரை.

"பாக்கியவதியே அப்படியே செய்கிறேன்" என்று கூறிவிட்டுச் சாதாரண பிராமணனைப் போன்ற உருவத்தில் அரசர்களை யாசிக்கப் புறப்பட்டார் அகத்தியர்.

மிக்க செல்வம் படைத்தவன் என்று பிரசித்தம் பெற்ற ஓர் அரசனிடம் சென்றார் அகத்தியர். அவனிடம் போய், "அரசே, தனம் வேண்டி வந்தேன். யாருக்கும் எவ்வித குறையோ, துன்பமோ ஏற்படாத வகையில் எனக்குத் தாங்கள் தானம் தரவேண்டும்" என்று கேட்டார் அகத்தியர்.

அந்த அரசன் தன் ஆட்சியின் வரவு செலவுக் கணக்கையெல்லாம் ஒன்றும் மறைக்காமல் முனிவரிடம் ஒப்புவித்தான். "பார்த்து எடுத்துக் கொள்ளுங்கள் சுவாமி" என்றும் கூறினான்.

ராஜ்யத்தின் வரவு செலவுக் கணக்கையெல்லாம் பார்க்கையில் மிகுதி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. வரவுக்குச் செலவு சரியாகவே இருந்தது. அதைப் பார்த்த அகத்தியர் "இங்கு நான் தானம் பெற்றால் பிரஜைகளுக்குத் துன்பம் ஏற்படும். வேறு எங்காவது பார்க்கிறேன்" என்று கூறிப் புறப்பட்டார் அகத்தியர்.

அந்த அரசன், "நானும் தங்களுடன் வருகிறேன்" என்று முனிவருடன் சேர்ந்து கொண்டான். இருவரும் இன்னொரு அரசனைத் தேடிச் சென்றனர். இன்னொரு அரசனிடம் போய் கேட்டபோது அங்கும் அதே நிலைமைதான் நிலவியது. நியாயமான செலவுக்கு எவ்வளவு வேண்டுமோ அந்த அளவுக்குத்தான் அரசன் பிரஜைகளிடம் வரி வசூலிக்கவேண்டும் என்னும் தத்துவம் இதன் மூலம் காட்டப்படுகிறது.

நியாயமான வரிகள் பெற்றுக் கடமைகளைப் பூரணமாகச் செய்து தர்ம சாஸ்திரப்படி நடந்து வரும் எந்த அரசனிடமாவது தானம் பெற்றால் அவனுடைய பிரஜைகளுக்கு அதனால் நஷ்டமும், துன்பமும் உண்டாகும் என்று அகத்தியர் உணர்ந்தார். ஆதலால் தானம் பெறுவதற்கு என்ன செய்வது என்று சிந்தித்தார் அகத்தியர்.

அந்தக்காலத்தில் இல்வலன் என்னும் கொடிய அரக்கன் ஒருவன் இருந்தான். அவனும் அவன் தம்பி வாதாபியும் பிராமணர்கள் மீது தீராத பகைமை கொண்டவர்கள்.

இல்வலன் பிராமணர்களை விருந்துக்கு அழைப்பான். மிகுந்த மந்திர சக்தியுடைய அவன் வாதாபியை அழகிய கனியாக உருவெடுக்கச் செய்வான். பின்னர் விருந்துக்கு வந்த பிராமணரிடம் அதனை உண்பதற்குக் கொடுப்பான்.

பிராமணர் அதனை உண்டு முடிந்ததும் "வாதாபி, வா" என்று அழைப்பான். தான் கொன்றவர்களை உயிர்ப்பிக்கும் வரத்தை இல்வலன் பெற்றிருந்தான். அதனால், பிராமணரின் வயிற்றைப் பிளந்து கொண்டு அசுர சிரிப்புச் சிரித்தபடி வாதாபி வெளியில் வருவான். பின்னர், மாண்டு போன பிராமணரை இருவரும் சேர்ந்து புசித்து மகிழ்வார்கள். இப்படிப் பல பிராமணர்கள் வாதாபியினதும், இல்வலனதும் செயலால் வயிறு கிழிக்கப்பட்டு மாண்டார்கள்.

அப்படிப்பட்ட அந்தக் கொடிய அரக்கனிடம் போய் தானம் கேட்பது என்று அகத்தியர் முடிவெடுத்தார். அதன்படி இல்வலன் என்னும் அந்தக் கொடிய அரக்கனைப் போய் தானம் கேட்பதற்கு அகத்தியர் புறப்பட்டார்.

(மிகுதி அடுத்த இதழில்...)



Digitized by Noolaham Foundation.

# புதிய நவீன விஞ்ஞான உத்திகள் மனித வாழ்வை எங்கே இட்டுச் செல்லும்?

பொருளாதார அபிவிருத்தி மற்றும் சூழல் மாசுபாடு ஆகிய இரண்டுக்கிடையிலும் மிகப் பெரிய தொடர்பு காணப்படுகின்றது. அநேகமான சந்தர்ப்பங்களில் பொருளாதார அபிவிருத்தியின் பொருட்டே நாடுகள் தத்தமது சூழலை பெரிதும் மாசுபடுத்துகின்றன. இதன் காரணமாகவே பொருளாதார அபிவிருத்தி என்பதும், சூழல் பாதுகாப்பு கொள்கைகளும் ஒன்றாக நிறுத்திச் சீதூக்கிப் பார்க்கப்பட வேண்டும் என்ற கருத்து அண்மைக்காலமாக வேரூன்றி வருகின்றது.

உலகளாவிய அமைப்பான ஐக்கிய நாடுகள் நிறுவனமும் மற்றும் ஐரோப்பிய, ஆசிய, அமெரிக்க, தெற்காசிய, பசுபிக் பிராந்தியம் போன்ற பிராந்திய ரீதியில் இயங்கும் நாடுகளின் அமைப்புக்களும் தத்தமது நிகழ்ச்சித் திட்டங்களில் இத்தகைய சூழல் மாசுபாட்டைக் கருத்திற் கொண்டதான அபிவிருத்தித் திட்டங்களுக்கு முக்கியத்துவம் வழங்குகின்றன. எனினும், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் பெரும்பாலும் தத்தமது பொருளாதார அபிவிருத்தி மற்றும் சூழல் மாசுபாடு தடுப்பு நடவடிக்கைகளுக்கு அபிவிருத்தியடைந்த நாடுகளின் நிதியிலேயே தங்கியுள்ளன.

சூழல் மாசுபாடு, பொருளாதார அபிவிருத்தி என்பனவற்றை ஒருங்கிணைத்து முன்னெடுக்கப்படும் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் நிலைத்து நிற்கும் அபிவிருத்தித் திட்டங்கள் (Sustainable Development Project) என்று அழைக்கப்படுகின்றன. இக்கருத்தினை பொருளாதார கோட்பாட்டறிஞர்கள் அண்மைக்காலமாகப் பலமாக வலியுறுத்தி வருகின்றனர்.

நிலைத்து நிற்கும் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் என்ற எண்ணக் கருத்து நாடுகளின் மிகக் குறைவான மூலவளங்களில் இருந்து மிக உச்சமான பயன்களைப் பெற்றுக் கொள்ளுதல், (உ+ம்: மிகக் குறைந்த நிலப்பரப்பில் இருந்து மிக அதிகமான விளைச்சலைப் பெறுதல்) சூழல் மாசுபாட்டினை மிகக் குறைந்த அளவில் வைத்திருத்தல், கைத்தொழில் கழிவுகளை சூழலில் விடாது அவற்றை மீள்பயன்பாட்டுக்காக மாற்றுதல், பச்சை வீட்டு வாயுத்தாக்கங்களை (Green House Gas Effects) குறைத்தல், புதிய விஞ்ஞான தொழில்நுட்ப யுக்திகளை ஊக்குவித்தல் முதலான அம்சங்களில் அதிக கரிசனை கொள்கிறது.

விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
இல:08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02
தொலைபேசி: 2314714, பெக்ஸ்: 2314968

இவ்வித பொருளாதார அபிவிருத்தி அம்சங்களில் குறைந்த மூலவளங்களைக் கொண்டு அதிஉச்சப் பயன்களை பெறுதல் என்ற விடயத்திலேயே அநேக நாடுகள் அதிகம் நாட்டம் காட்டுகின்றன. காரணம் இருமடங்கு, பன்மடங்கு எனப் பல்கிப் பெருகிவரும் தம் நாடுகளின் ஜனத்தொகையை போஷிக்கப் போதுமான மூலவளங்கள் பல நாடுகளிடமும் காணப்படவில்லை. எனவே, இவர்கள் தத்தமது நாடுகளில் கிடைக்கப் பெறும் மிகக் குறைந்த மூலவளங்களைக் கொண்டு அதி உச்சப் பயனைப் பெற்றுக் கொள்ளும் புதிய விஞ்ஞான தொழில்நுட்ப முறைகளில் அதிக ஆர்வம் செலுத்துகின்றனர். (உ+ம்: மரபணு மாற்றியமைக்கப்பட்ட உணவுப் பொருட்கள்- Genetically Modified Food)

என்றபோதும் இவற்றினாலெல்லாம் எந்த அளவுக்கு மனிதசமூகம் ஒட்டு மொத்தமான நன்மையை அடைந்துள்ளது என்பது இன்னமும் கேள்விக் குறியாகவே உள்ளது. காரணம் மரபணு மாற்றியமைக்கப்பட்ட உணவுப் பொருட்களை உண்பதால் தீங்கு உண்டா என்ற கேள்விக்கு இன்னமும் தெளிவான பதில் இல்லை. நிலத்தில் அபரிதமான இரசாயனப்பாவனை, உரப்பாவனை, கிருமிநாசினிப் பாவனை மற்றும் விலங்குகள், கோழிகள் முதலானவற்றுக்கு ஹோமோன் ஊசி ஏற்றப்பட்டு அபரிதமான வளர்ச்சி ஏற்படுத்துதல் முதலான, நவீன தொழில்நுட்ப உத்திகள் மனித வாழ்வை எங்கே இட்டுச் செல்லும் என்பது பூரணமாக ஆராயப்பட வேண்டும்.

# மூன்று ஆண்டுகளுக்குள் இரண்டாம் மொழி கற்கவேண்டும்

அரசாங்க சேவையில் உள்ளவர்கள் தமிழ், சிங்கள மொழிகளைக் கற்பதற்கான அவசியத்தை வலியுறுத்தி அமைச்சரவைக்குச் சட்ட மூலமொன்றினைச் சமர்ப்பிக்கவுள்ளதாக அரசியலமைப்பு அலுவல்கள் தேசிய ஒருமைப்பாடு மற்றும் சட்ட நீதி மறுசீரமைப்பு அமைச்சர் டியூ.குணசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள பெரும்பாலானவர்களுக்கு ஒரு மொழி மாத்திரம் தெரிவதனாலேயே பல பிரச்சினைகள் உருவாகியுள்ளன. அரசாங்க காரியாலயங்களில் தமிழ் மொழி மூலம் கேட்கப்படுகின்ற ஒரு பிரச்சினைக்கு சிங்கள மொழி மூலம் பதில் அனுப்பப்படுகிறது. அதேபோல் திருகோணமலை, கந்தளாய் போன்ற பகுதிகளில் சிங்கள மொழியில் பதில் கோரப்படுகின்ற பிரச்சினைகளுக்குத் தமிழில் பதில் அனுப்பி வைக்கப்படுகிறது.

இரண்டாம் மொழிக்கான தேவையை எம்மில் பலர் உணரவில்லை என்பதனால் ஏற்படுகின்ற இச்சிரமங்களை இனி வருங்காலங்களில் முற்றாக இல்லாமற் செய்யவேண்டும். அரச சேவையின் கீழ் உள்வாங்கப்படுகின்ற சிங்களவர்கள் தமிழ் மொழியையும், தமிழர்கள் சிங்கள மொழியையும் எதிர்வரும் மூன்று ஆண்டுகளுக்குள் கற்று முடிக்க வேண்டும் என்றும் இதற்கான சட்ட மூலமொன்றினை அமைச்சரவைக்கு விரைவில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சமீபத்தில் ஹட்டனில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு பேசிய போதே டியூ.குணசேகர மேற்படி கருத்தைத் தெரிவித்துள்ளார்.

# 60 மாணவர்களுக்கு இந்திய புலமைப்பரிசில்

இந்தியாவில் பட்ட, பட்டப்பின் படிப்புகளைத் தொடர்வதற்காக 60 இலங்கை மாணவர்களுக்கு இந்தியா புலமைப் பரிசில்களை வழங்கியுள்ளது. இலங்கை இந்தியத் தூதுவர் நிருபமாராவ் கடந்த வாரம் இப்புலமைப் பரிசில்களை வழங்கியிருந்தார்.

புதுடெல்லி, இந்திய கலாசாரத் தொடர்புகளுக்கான மையத்தினால் வழங்கப்படுகின்ற இப்புலமைப் பரிசில், கற்கை நெறிகளுக்கான கட்டணம், வாழ்க்கைச் செலவு,விமானப் பயணச்சீட்டு உள்ளிட்ட வசதிகளை அடக்கியுள்ளது.

# புதிய நேர மாற்றத்தால் பாடசாலைகளுக்குத் தாமதமாகும் மாணவர்கள்



பாடசாலைகளில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ள புதிய நேர மாற்றத்தினால் தூர இடங்களிலிருந்து பாடசாலை செல்கின்ற மாணவர்கள் தாமதமாகவே பாடசாலைக்குச் செல்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை உள்ளிட்ட அரசாங்க நிறுவனங்கள் யாவும் 30 நிமிட நேரம் முன்கூட்டி ஆரம்பிக்கப்பட வேண்டும் என அமைச்சரவை உபகுழு நிறைவேற்றியிருந்த தீர்மானத்திற்கமைய, கடந்த வாரம் முதல் காலை 7.30 மணிக்குப் பாடசாலைகள் யாவும் ஆரம்பமாகின. இத்துடன் பஸ், ரயில் சேவைகளின் நேரங்களும் மாற்றம் செய்யப்பட்டன.

இதனால், தூர இடங்களிலிருந்து பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள் மிகவும் தாமதமாகவே பாடசாலைக்குச் சமூகமளித்து வருகின்றனர். கொழும்பு உள்ளிட்ட சில இடங்களில் இந்நிலை ஏற்பட்டிருந்ததாகவும், பாடசாலைகளின் நுழைவாயில் 7.30 மணியுடன் மூடப்பட்டதால் தாமதமாகி வந்த மாணவர்கள் வெளியே காத்து நின்றதாகவும் தெரிய வருகின்றது.

சில பாடசாலைகளின் அதிபர்கள் இம்மாணவர்களை உள்ளே அனுமதித்த போதிலும், சில பாடசாலை அதிபர்கள் அவர்களை வீட்டுக்கு அனுப்பி வைத்ததாகவும், இதனால் பெற்றோர் விசனமடைந்து பாடசாலை வாயிற்காவலருடன் தர்க்கத்தில் ஈடுபட்டதுடன், தமக்குப் புதிய நேரம் குறித்த தகவல்கள் எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை என்று குற்றஞ்சாட்டியதாகவும் தெரியவருகிறது.

இப்புதிய நேரமாற்றத்தினால் மாணவர்கள் தற்போது எதிர்நோக்கும் சிரமங்கள் காலப்போக்கில் சரியாகி விடுமென சில பாடசாலை அதிபர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால், மலையகப் பகுதி மாணவர்கள் தொடர்ந்தும் சிரமங்களை எதிர் நோக்குவரென்றே தெரிவிக்கப்படுகிறது.


# விஜய் வாசகர் அறிவுப் போட்டி

வாசகர்களே! இம் மாதத்தின் அனைத்து "விஜய்" இதழ்களையும் உன்னிப்பாக வாசிப்பதுடன் அவற்றைப் பாதுகாத்தும் வையுங்கள். இந்த இதழ்களில் உள்ள விடயங்களில் இருந்து வினாக்கள் தெரிவுசெய்யப்பட்டு அவற்றுக்குச் சரியான விடையளிக்கும் 3 அதிர்ஷ்டசாலிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்குப் பெறுமதிமிக்க கல்குலேட்டர் (Calculater) அல்லது டி.வி கேம்ஸ் (T.V.Games) பரிசுகளாக வழங்கப்படும்.

- போட்டி ஒவ்வொரு மாதமும் நடைபெறுவதுடன் வினாக்கள் மாதத்தின் முதல் வாரத்தில் பிரசுரிக்கப்படும்.
- நான்கு மாதங்களுக்கொருமுறை மாபெரும் பரிசுக் குலுக்கல் மூலம் மேலும் மூன்று அதிர்ஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு உயர் பெறுமதியிலான பரிசுகள் வழங்கப்படும்.
- மாபெரும் பரிசுப் போட்டி பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனொளிபாத யாத்திரை



இலங்கையின் வரலாற்றில் மிகவும் உன்னதமான இடத்தைப் பிடித்த ஒரு ஸ்தானம் தான் சிவனொளிபாத மலையும், வருடாந்தம் அந்த இடத்தைத் தரிசிக்க மேற்கொள்ளப்படும் யாத்திரையுமாகும். சங்கிலித்தொடர் போன்று காட்சி தரும் பசுமையான வனாந்தரத்திற்கு மத்தியில் மலைத்தொடரின் அதிஉயர் மலையாக இந்தச் சிவனொளிபாத மலை அமைந்திருக்கிறது.

கடல் மட்டத்தில் இருந்து 7360 அடி உயரத்தில் அமைந்துள்ள இந்த மலை சிங்கள மொழியில் 'சுமனகிரிய', 'சமந்தகுட பர்வதய', 'சமன்கிர' என்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றது. இலங்கையின் வரலாற்றில் ஆரம்பம் முதல் இன்றுவரையில் இந்தச் சிவனொளிபாதமலை பிரசித்தம் பெற்ற இடமாக இருந்து வருகின்றது.

புத்தர் நான்காவது முறையாக இலங்கைக்கு விஜயம் செய்த போது இங்கு சென்று தமது பாதத்தைப் பதியச் செய்ததாகப் பௌத்தர்கள் நம்புகின்றனர். அதேபோன்று கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் உலகின் முதல் மனிதர் என்று நம்பப்படும் ஆதம் நபியின் பாதத்தின் பதிவு இந்த மலையில் இருப்பதாக நம்புகின்றனர். அதனாலே இந்த மலைக்கு 'அடம்ஸ்பீக்' (Adams Peak) என்ற பெயர் கொண்டு அழைக்கின்றனர்.

ஆனாலும் இஸ்லாமிய நம்பிக்கை என்று கூறப்படும் ஆதி பிதா ஆதம் அலை அவர்களின் பாதம் சிவனொளிபாத மலையில் பதிவாகியது என்பதற்கு உறுதியான ஆதாரங்கள் எதுவும் இல்லை. அதனால் அது தொடர்பான பரவலான நம்பிக்கை இல்லை எனலாம்.





ஆயினும் பௌத்தர்களின் கண்ணோட்டத்தில் பார்க்குமிடத்து அவர்களின் நம்பிக்கை உச்ச நிலையில் இருந்து வருகின்றது. நிசங்க மன்னனின் காலத்தில் இங்கு 10 கல்வெட்டுக்கள் பதியப்பட்டதாகவும் முதலாவது பராக்கிமபாகு காலத்தில் இங்கு அமைந்துள்ள சமன் தேவாலய என்ற பௌத்த விகாரை நிர்மாணிக்கப்பட்டதாகவும் பௌத்த வரலாற்று ஆவணங்கள் கூறுகின்றன.

சிவனொளிபாத மலைக்கு யாத்திரை மேற்கொள்பவர்களின் வசதி கருதி வீரவிக்கிரம என்ற அரசன் கருங்கற்களால் 760 படிகளை நிர்மாணித்ததாகவும் அங்கு மத அனுஷ்டானங்களை மேற்கொள்ள இலகுவாகத் தேவாலயத்தை நிர்மாணித்ததாகவும் கூறப்படுகின்றது.



இவ்வாறு படிகள் கொண்ட அமைப்பில் ஒழுங்கான ஏறுபாதை 1940 ஆம் ஆண்டளவிலே நிர்மாணிக்கப்பட்டது. கிரேக்க வரலாற்றுப் பதிவொன்றுக்க மைய கி.மு 4ஆம் நூற்றாண்டில் மகா அலெக்சாண்டர் இந்தச் சிவனொளிபாத மலையைத் தரிசித்ததாகவும் கி.மு 20 ஆம் நூற்றாண்டளவில் காஷ்மீரைச் சேர்ந்த 'மேகவர்ன' அரசன் சிவனொளிபாத யாத்திரை மேற்கொண்டதாகவும் குறிப்புக்கள் உள்ளன.

# "ரூபாய்" உருவான கதை

எமது தேவையை நிறைவு செய்ய இன்று அத்தியாவசியமான ஒன்றுதான் பணம். பணம் இன்றேல் எதையும் செய்ய முடியாத நிலை இருந்து வருகின்றது. இந்தப் பணம் எவ்வாறு உருவாகியது என்று ஆராயும் போது அதன் தோற்றத்தை அறியக் கற்காலத்திற்கே செல்ல வேண்டிய நிலை இருந்து வருகின்றது. ஆயினும், மேற்கு நாட்டவர்களிடம் இருந்து நாம் பெற்றுக் கொண்ட ஒரு பரிமாற்ற



முறையாகக் கருதப்படுகின்றது. பண்டைய அரசர்கள் காலத்தில் தங்க, வெள்ளி நாணயங்கள் புழக்கத்தில் இருந்துள்ளன.




இலங்கையில் போர்த்துக்கேய அரசு முதலில் 'ஸ்டோம்' மற்றும் 'தங்கம்' என்ற பணப்பரிமாற்றத்தை ஏற்படுத்தியதாகக் கருதப்படுகின்றது. இந்த நாணயங்களின் ஒரு பகுதியில் அதன் பெறுமதியும் மறுபக்கத்தில் மதச் சின்னமும் பொறிக்கப்பட்டதாக இருந்திருக்கின்றது. அதன் பின்னர் இலங்கையைப் போர்த்துக்கேயரிடம் இருந்து கைப்பற்றி ஆட்சி செய்த ஒல்லாந்தரும் அவர்களின் தேவைக்கேற்ப அவர்களது நாணயப் பரிமாற்றத்தை அறிமுகம் செய்துள்ளனர்.

அதன்படி 'செப்பு துட்டு', 'பணம்' என்ற பெயர்களில் பணம் புழக்கத்தில் விடப்பட்டிருக்கின்றது. இதில் மிகக் குறைந்த பெறுமதிக்குரிய நாணயமாகத் 'துட்டு' இருந்திருக்கின்றது. 'பதாகய' என்ற பணம் ஆகக் கூடுதலான பெறுமதிக்குரியதாக இருந்திருக்கின்றது. இதற்கு மேலதிகமாக ஒல்லாந்தர் காலத்தில் புழக்கத்தில் இருந்த இன்னுமொரு வகை நாணயம் "Voc" என்ற பணமாகும். Voc என்பதன் அர்த்தம் தூரகிழக்கு வியாபார நிறுவனம் ஆகும்.

அந்த நாணயத்தின் மறுபக்கத்தில் ஒல்லாந்த இலச்சினை பொறிக்கப்பட்டிருந்தது. அவர்கள் அறிமுகப்படுத்திய நாணயத்தில் 'நட்சத்திர பகோதிய' என்ற நாணயம் புழக்கத்தில் இருந்திருக்கின்றது.

அத்தோடு 'துட்டு', 'பணம்' என்ற நாணயங்களும் மாற்றம் செய்யப்பட்டன. தமது நாட்டில் புழக்கத்தில் இருந்த 'பவுண்', 'சிலிங்', 'பென்ஸ்' ஆகிய நாணய முறையையும் இங்கு அறிமுகம் செய்ய அவர்கள் தவறவில்லை. நாணயத்திற்கு மேலதிகமாகத் தாள் நாணயங்களைப் பயன்படுத்தும் முறையையும் அறிமுகப்படுத்தியவர்கள் ஒல்லாந்தர்களேயாவர்.




'பதாக்' என்ற பெயரில் தாள் நாணயங்களை ஒல்லாந்தர்களே அறிமுகப்படுத்தினர். 50, 100, 500, 1000 என்ற பெறுமதிகளில் தாள் நாணயங்களை அறிமுகப்படுத்தினர். ஆயினும் 1796 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றி அவர்களின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்ததோடு இந்த நாணயப் பரிமாற்ற நடைமுறையில் மேலும் முன்னேற்றம் ஏற்பட்டது.

1933 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் அப்போது இந்தியாவில் புழக்கத்தில் இருந்த ரூபாய் முறையை இலங்கையிலும் அறிமுகம் செய்ய முயற்சி எடுத்தனர். அதன்படி இங்கு நடைமுறையில் இருந்த நாணயப் புழக்கத்தை மாற்றியமைத்தனர். 1885 ஆம் ஆண்டளவில் 5, 10, 50, 100 என்ற மதிப்புகளில் தாள் நாணயப் பரிமாற்றத்தையும் அறிமுகப் படுத்தி வைத்தனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இராசி மண்டல ஆராய்ச்சியில் நாஸா!




கோள்களுடைய ஆராய்ச்சியில் தீவிரமாக ஈடுபட்டு வந்த அமெரிக்க விண்வெளி நிலையம் தற்போது இராசிகளை ஆராய்வதில் இறங்கியுள்ளது.

துலா ராசியையும் விருச்சி ராசியையும் தான் முதலில் ஆராய்ந்து வருவதாகக் கூறும் நாஸா, இவ்விரண்டினதும் பிரகாசம் முன்னரை விட அதிகரித்திருப்பதாகக் கூறுகிறது.

# ஜூப்பிட்டர் முக்கோணம்

ஜூப்பிட்டர் கோளினைச் சுற்றியொரு முக்கோணம் தோன்றியுள்ள தாகக் கோள்களை ஆராய்ந்து வருகின்ற விஞ்ஞானிகள் குழுவினர் தெரிவிக்கின்றனர். மாலை நேரத்தில் வானில் இதனை நன்கு அவதானிக்க முடியும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இராசி மண்டலத்துக்கு மிகவும் நெருக்கமாகவே ஜூப்பிட்டர் கிரகம் இருப்ப தாகவும் இந்த விஞ் ஞானிகள் தெரிவிப் பது உண்மையே என்று நிறுவியுள் ளது நாஸா.



# விண்வெளித் தகவல்கள்

லதா

# வெள்ளியைச் சுற்றி...!

ஐரோப்பிய விண்வெளி நிலையமான ஈஸா (ESA) வெள்ளிக் கோளினை ஆராய்வதற்காக அனுப்பிய விண்கலமொன்று 43 தடவைகள் வெள்ளியைச் சுற்றி வந்து; 207 நாட்களுக்குப் பின்னர் சில தகவல்களைப் பதிவு செய்துள்ளதாக ஐரோப்பிய விண்வெளி நிறுவனத்தினர் செய்தி வெளியிட்டுள்ளனர். 'வீனஸ் எக்ஸ்பிரஸ்' என்ற பெயருடைய அவ்விண்கலம், 2007 ஒக்டோபர் வரையில் வெள்ளியைச் சுற்றி வரும் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.



கடந்த நான்கு வாரங்களுக்கு முன்பு வெள்ளிக் கோளின் சுற்று வட்டப் பாதையிலுள்ள சந்திரனைப் படம் பிடித்திருந்த அவ் விண்கலம் சிறு கோளாறுக்கும் உள்ளாகியதாகச் சமிக்ஞை கிடைத்துள்ளதாம்.

ஆனால், அதனைக் கண்காணித்துக் கொண்டுள்ள விஞ்ஞானிகள் குழு; மீண்டும் அது சுற்றி வந்து கொண்டிருப்பதாய் கூறுகின்றனர்.

செவ்வாய், சனி ஆகிய இரண்டு கோள்களைப் பற்றி அதிகமாக ஆராயும் விஞ்ஞானிகள் தற்போது தான் பிற கோள்கள் பற்றிய ஆராய்ச்சியில் இறங்கியுள்ளனர். அந்த அடிப்படையில் வெள்ளி பற்றிப் பல்வேறு தகவல்களை ஈஸா பெற்றுக் கொண்டு செய்தி வெளியிடும் என்று நாஸா விஞ்ஞானிகளும் கூட எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனராம்.

# 2007இல் ஈஸா வீரர்கள் தனியாகப் புறப்படுவார்கள்!

நாஸாவின் துணையோடு பல சாதனைகளை ஆற்றி வந்த ஐரோப்பிய விண்வெளி நிலையமான 'ஈஸா' (ESA) தன்னுடைய நிலையத்திலிருந்து விண்வெளி வீரர்களை அனுப்புவது குறித்துத் திட்டமிட்டிருந்தது. இவர்கள் நாஸா வீரர்களுடன் இணைந்தே செல்வார்கள் என்று முதலில் முடிவு செய்யப்பட்டிருந்தாலும், தற்போது ஈஸா அதனை மாற்றிக் கொண்டு விட்டது. தற்போது தனியொரு விண்கப்பலைத் தயாரித்து வருகின்ற ஈஸா 2007 இல் அக்கப்பலில் ஐரோப்பிய விண்வெளி வீரர்கள் மட்டும் விண்ணுக்குப் பயணம் செய்வார்கள் என்று சர்வதேச ஊடகங்களுக்கெல்லாம் செய்தி தெரிவித்திருக்கிறது.




இச்செய்தி தொடர்பான அபிப்பிராயங்களைப் பகிர்ந்து கொள்வதற்குத் தனியொரு குழுவையும் ஈஸா நியமித்துள்ளது.

இப்பயணக் குழுவிற்குத் தலைமை வகிக்கவுள்ள வீரரைத் துரத்திப் பிடிக்கத் தொடங்கியுள்ளன ஐரோப்பிய ஊடகங்கள்.

பலோ நேஸ்போலி என்ற பெயருடைய அவ் விஞ்ஞானி பயணத்திற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளதைத் தொடர்ந்தே இந்த ஊடகப் பரபரப்பு ஏற்பட்டுள்ளதாம். இவர்கள் பயணிப்பதற்குத் தயாராகி வரும் புதிய விண்கப்பலுக்கு STS-120 என்று பெயரிடப்பட்டுள்ளதாம். பலோ இத்தாலி நாட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

2007 ஆம் ஆண்டில் விண்ணுக்குச் செல்லும் தூதுக்குழு என்று மட்டும் செய்தியில் குறிப்பிடப்பட்டிருக்கிறதே தவிர, மாதம் எதுவென்பது இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

# மருத்துவம் பார்க்கும் ரோபோக்கள்



பல்வேறு மனித தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட ரோபோக்கள் வெற்றிகரமாகத் தம் பணியை முடித்துக் கொண்டு தான் உள்ளன. விளையாட்டு, வீட்டுவேலை, அலுவலகப்பணி என்று ரோபோக்களின் பயன்பாடு தொடர்ந்து கொண்டே வருகின்றமையின் அடுத்த கட்ட முன்னேற்றமாகத் தற்போது ரோபோக்களை மருத்துவத்துறையில் பயன்படுத்துவதற்கும் விஞ்ஞானிகள் தயாராகி விட்டனர். ரோபோக்களைத் தயாரிப்பதில் முன்னிலை வகிக்கும் நாடான ஜப்பானின் விஞ்ஞானி ஒருவர், 'ரோபோக்களுக்குப் பொறாமை உணர்வு உண்டு' என்று சமீபத்தில் நிறுவல் ஒன்றினைச் செய்து காட்டினார்.

அவற்றின் செயற்பாடுகளை மிகவும் உன்னிப்பாகக் கவனித்து வருகின்ற விஞ்ஞானிகள் மனிதர்களுக்கு இருக்கின்ற பல்வேறு உணர்வுகளை ரோபோக்களும் கொண்டிருப்பதாகக் கூறுகிறார்கள்.

இத்தனை ஆச்சரியமான அந்தச் செயற்கை மனிதர்கள் (ரோபோக்கள்) மருத்துவம் பார்ப்பதிலும் வெற்றி காண்பார்கள் என்று தான் நம்பத் தோன்றுகிறது. அதிலும், அறுவைச் சிகிச்சைக்காக இவை பயன்படுத்தப்படப் போகின்றன என்பது நம் ஆர்வத்தைத் தூண்டி விடவே செய்கிறது. பொறுத்திருந்து தான் பார்ப்போமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயிலழகு பார்ப்போமா?



உலகில் வாழும் பறவைகளுள் மிக அழகான பறவையாகக் குறிப்பிடக் கூடியவற்றில் முதலிடத்தைப் பெறுவது மயிலாகும். நீண்ட அழகான தோகை இப்பறவையின் ஆபரணமாக உள்ளது. Robin என்று அழைக்கப்படும் சிறு பறவையின் தோகையைக் கடனாகக் கேட்டேடுத்துப் பின்பு அதனைத் திருப்பிக் கொடுக்காமல் வைத்திருக்கும் சுயநலவாதி என்று அப்பறவையைப் பற்றிய கதைகளில் கூறப்படுகின்றது. முருகக் கடவுளின் வாகனமாக மயில் இருப்பதன் காரணமாகக் கடவுளின் ஆசிர்வாதத்தைக் கொண்டுள்ள பறவையெனவும் நம்பப்படுகின்றது. இப்பறவையை அடிப்படையாகக் கொண்டு பல மரபுக் கதைகள் உள்ளன.

இப்பறவைகள் ஆண், பெண் வேறுபாட்டை மிக இலகுவாகக் கண்டு கொள்ளலாம். ஆண் மயில் நீண்ட தோகையைக் கொண்டிருக்கும். பெண் மயிலுக்குத் தொகை இல்லை.

இலங்கையின் தாழ்நில வறண்ட வலயத்தில் முக்கியமாக வடமேற்கு, கிழக்கு மற்றும் தென் கிழக்குப் பிரதேசங்களில் மயில்கள் அதிகமாக வாழ்கின்றன. பெண் மயிலானது 102-117 சென்றிமீற்றர் வரையிலான அளவைக் கொண்டிருக்கும். ஆண் மயில் அழகான நீண்ட தோகையைக் கொண்டிருப்பதோடு இது தோகையுடன் 250 சென்றிமீற்றர் நீளத்தைக் கொண்டிருக்கும். ஆண் மயிலின் தோகையில் மினுக்கத்துடன் கூடிய நீலம், பச்சை கலந்த பொன்னிறம் காணப்படும்.

ஆண் மயிலின் பின்புறமுள்ள நீண்ட சிறகுகள் தோகை என்று அழைக்கப்படுகின்றது. தன் சோடியான பெண் மயிலைத் தெரிந்தெடுப்பதற்காகவும் மற்றும் பெண் மயில்களைத் தன்பால் கவர்ந்திழுப்பதற்காகவும் போத்து என்று அழைக்கப்படும். ஆண் மயில் தோகையை விரித்தாடும். ஆண் மயில் தன் நீண்ட தோகையை விரித்தாடும்போது இரண்டு அல்லது மூன்று பெண் மயில்கள் அருகில் இருக்கும் தோகையில்லாத பெண் மயில் அலகு என்று அழைக்கப்படும்.

நிலத்திலுள்ள காய்ந்த இலைகள், புல் என்பவற்றைக் கொண்டு தன் கூட்டை அமைத்துக் கொள்ளும் இந்த அபூர்வமான பறவையானது ஒருமுறைக்கு 3-5 வரையான முட்டைகளை இடும். அவை 69x55 மில்லிமீற்றர் அளவுடையதாக இருக்கும். முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் இப்பறவைகளின் குஞ்சுகள் அனேகமாக பெண் மயிலுடனேயே வாழும் குளக்கரை, புல் நிலங்கள் மற்றும் பயிர் நிலங்களில் மயில்களை அதிகமாகக் காணலாம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பத்திரிகை உருவாக வழிகாட்டிய



# வர்த்தமானி



ப.இரஞ்சித் ஜெயகர்

நெடுங்காலமாகவே மனிதன் பல்வேறு தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக மிகுந்த பிரயத்தனம் செய்திருக்கிறான். அதனால், முக்கிய தொடர்பாடல் சாதனமாகிய அச்சு ஊடகம் உலகில் உதயமாகியது. இலங்கையில் செய்தித்தாளாக முதன்முதலாக அச்சில் வெளிவந்த வெளியீடு இன்றுவரை நம் நாட்டில் வெளியாகிக் கொண்டிருக்கும் விடயம் பலருக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆம். அதுதான் 1802 முதல் இன்று வரை வெளிவந்து கொண்டிருக்கும் இலங்கை அரசின் வர்த்தமானியாகும்.

## ஆரம்பம்

இலங்கையின் முதலாவது பிரித்தானிய ஆளுநர் சேர்.பிரட்ரிக் நோர்த்தே. வர்த்தமானி (Gassette) அறிவித்தலை, அச்சிட்டு வெளியிட வேண்டும் என்ற ஆலோசனையை வழங்கியவராவார். அதுவே அரச அச்சகமொன்றின் மூலம் வெளியிடப்பட்ட முதலாவது உத்தியோகபூர்வ வெளியீடுமாகும். அத்துடன் இதுவே இந்நாட்டின் செய்திப் பத்திரிகையினதும், வர்த்தமானி அறிவித்தலினதும் ஆரம்பமாகும். அன்று இரண்டே பக்கங்களைக் கொண்டு வெளியான வர்த்தமானி பிரசுரத்தின் விலை 2 ரிக்ஸ் டொலர் ஆகும். இந்த வெளியீட்டின் அனைத்துப் பொறுப்புகளும் பிரான்ஸ் டி பிமைன் என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அத்துடன் இலங்கையில் தவணைக்கொன்றாக வெளியான முதல் வெளியீடாகவும் இந்த வர்த்தமானிப் பத்திரம் கணிக்கப்படுகிறது.

## உள்ளடக்கம்

அரசாங்க அறிவித்தல்கள், கப்பல் போக்குவரத்து விபரங்கள், நீதிமன்ற மற்றும் சட்ட வெளியீடுகள், பகிரங்க ஏல விற்பனை என்பன மாத்திரமல்ல பிரித்தானிய அரசின் முக்கிய தகவல்களும் அக்காலத்தில் அதில் அடங்கியிருந்தன. ஆனால், அது இன்று போல் பொதுமக்கள் பார்வைக்கு இருக்கவில்லை.

அன்று ஆங்கிலம் கற்றவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஒரு வெளியீடாக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அதைத் தவிர தனிப்பட்ட சில தகவல்களும் பல்வேறு இலக்கியப் படைப்புகளும் வர்த்தமானிப் பிரசுரத்தில் அடங்கியிருந்தன. இலங்கையில் வாழ்ந்த பிரித்தானியர் மாத்திரமல்ல; அவர்களுக்கு சார்பானவர்களதும் தகவல்கள்,படைப்புகள், அறிவித்தல்கள் இந்த வர்த்தமானி (Gassette) யில் வெளியிடப்பட்டது.

பிரித்தானியர் மலைநாட்டைக் கைப்பற்றியமை, கண்டி ஒப்பந்தம், ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னனைக் கைது செய்தது போன்ற முக்கிய நிகழ்வுகளும் இந்த வர்த்தமானியில் வெளியிடப்பட்டன.

இவ்வாறு அன்று உருவான வர்த்தமானி (Gassette) பிரசுரம் இந்நாட்டின் செய்திப் பத்திரிகைத்துறையின் முன்னோடியாகத் திகழ்ந்தது. அத்துடன் பத்திரிகைத் துறை வளர்ச்சிக்கு உறுதியான அத்திவாரமாகவும் அமைந்தது. இந்த வர்த்தமானியானது அதுவரை நிலவி வந்த செய்தித்தாள் இல்லாத குறைபாட்டை ஓரளவேனும் குறைத்தது. இதனால், செய்தியை அறிந்து கொள்ளும் ஆர்வமும், ஆசையும் மக்களிடையே வளர்ந்தது.

## வர்த்தமானியும் முதலாவது பத்திரிகையும்

இச்சந்தர்ப்பத்தில் இந்நாட்டின் இரண்டாவது ஆளுநராகச் சேர் ரொபட் பிரவுண்ட்ரிக் (Sir Robert Browndrick) அவர்களுடன் வருகை தந்த அவரின் அந்தரங்கச் செயலாளரும் சேர்.பிரவுண்ட்ரிக்கின் நெருங்கிய உறவினருமான ஜோர்ஜ் பெஸட்டிடம் இலங்கை வர்த்தமானி பிரசுரத்தைத் தயாரிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. அரச அறிவித்தலுக்கு மேலதிகமாகச் செய்திகள் அடங்கிய இணைப்பு ஒன்றும் அவர் காலத்தில் சேர்க்கப்பட்டது. எனினும், ஆட்சியாளரின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் பின் அந்த இணைப்புக் கைவிடப்பட்டது.

இத்தகைய பின்னணியில் தமது தாய்நாட்டின் இலக்கியப் படைப்பாளிகளுடன் நெருங்கிய தொடர்பிருந்த சேர்.ரொபர்ட் ஹோட்டன் ஆளுநராக நியமிக்கப்பட்டார். தனது அறிவையும், எண்ணங்களையும், விருப்பத்தையும் நிறைவேற்றும் பொருட்டு இந்நாட்டின் முதலாவது செய்தித்தாளாக 'த கலம்பு ஜேர்னல்' - 'The Colombo Journal' என்ற பத்திரிகையை வெளியிடச் சேர்.ரொபட் ஹோட்டன் அரும்பாடுபட்டார்.

அப்பத்திரிகை அரச அச்சகத்திலேயே அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். வரையறுக்கப்பட்ட தொகையில் 1832 ஜனவரி 7 இல் அப்பத்திரிகை வெளியானது. அதில் ஆளுநர் பல்வேறு புனைபெயர்களில் பல கடிதங்களை வெளியிட்டார்.

இப்பொழுது பொரளையில் வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு அருகில் உள்ள கட்டிடம் செய்திப் பத்திரிகையின் பிரதான அலுவலகமாகியது. தினந்தோறும் அங்கு 200 சிறைக் கைதிகள் செய்திப்பத்திரிகை அச்சேற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அதற்கான கொடுப்பனவுகளும் கைதிகளுக்கு வழங்கப்பட்டது.

அரச அச்சகத்தின் முதலாவது இலங்கையைச் சேர்ந்த பணிப்பாளராக பேர்னாட் டி சில்வா என்பவர் விளங்கினார்.

இன்று வெளியிடப்படும் வர்த்தமானி அறிவித்தல் பிரசுரம் இரு நூற்றாண்டுகளுக்கு மேலாக தவறாது வெளிவரும் பழைமை வாய்ந்த ஒரே ஒரு வெளியீடாக வரலாற்றில் இடம் பிடித்துள்ளது.



# பேசும் டொல்பின்கள்!

டொல்பின்களின் சாகஸங்கள் பலவற்றை நாம் நேரிலும், தொலைக்காட்சிகளிலும் பார்த்திருப்போம். மனிதனுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்ட பிராணிகளில் டொல்பினும் குறிப்பிடக்கூடிய ஒன்றாகும். இத்தகைய டொல்பின்களுக்கு பல்வேறு வகையில் திறமைகள் இருப்பதாகக் கூறப்படுவதுண்டு.

இதனால், டொல்பின்களைப் பற்றிய ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இத்தகைய ஆராய்ச்சிகளின் கீழ் புதிதாகக் கிடைக்கப் பெற்றுள்ள தகவலின்படி டொல்பின்கள் ஒவ்வொன்றும் மனிதர்களைப் போலவே தமக்கிடையே பெயர்களை வைத்துக் கொண்டுள்ளதாக அறியப்பட்டுள்ளது. ஆகையால் நாம் மற்றவர்களை எவ்வாறு பெயர் கூறி அழைக்கின்றோமே அது போலவே இந்த டொல்பின்களும் ஒன்றையொன்று பெயர் கூறித்தான் அழைக்கின்றனவாம். தமது இனத்தைச் சார்ந்த உயிரினங்களைப் பிரித்தறியும் பக்குவமானது மனிதர்களைப் போலவே டொல்பின்களுக்கும் காணப்படுகின்றதாகவும் இவை குறித்தான ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ள புனித என்ட்ரூ பல்கலைக்கழகத்தின் சார்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் பலனாகவே இந்த உண்மையை அறிய முடிந்துள்ளது. கடற்கரையோரங்களுக்கு வந்த சில டொல்பின்களை வலைவீசிப் பிடித்தபோது, அவை எழுப்பிய சத்தங்களை இந்த ஆராய்ச்சியாளர்கள் ஒலிப்பதிவு செய்தனர். அதன் பின்னர், அந்த ஒலிப்பதிவினைக் கணினிக்கு மாற்றம் செய்து அவ்வொலியினை மேற்கொண்டு ஆராய்ச்சி செய்தனர். அடுத்து இந்த ஒலியினை அந்த டொல்பின்கள் கேட்கக் கூடியவாறு ஒலிக்கச் செய்யப்பட்டது.

அதன்போது, அவை அந்த ஒலிகளுக்கேற்ப தமது உணர்வுகளை வெளிப்படுத்துவதைக் காணமுடிந்தது. இதனை அடிப்படையாக வைத்து மேற்கொண்டு நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளின் பெறுபேறாக டொல்பின்கள் ஒன்றையொன்று அறிந்து கொள்வதற்கு சத்தங்களைப் பயன்படுத்துகின்றன என்பது தெரியவந்துள்ளது.

**டொல்பின்கள் பற்றிய சில குறிப்புக்கள்**



| | |
|---|---|
| * பொதுவான நீளம் | - 12 அடி |
| * நிறை | - 1400 இறாத்தல் |
| * வாழ்க்கை | - கடல், கடற்கரை, நதியோரங்கள். |
| * அதிகப்படியாகக் காணக்கூடிய இடங்கள் | - அத்திலாந்திக் சமுத்திரம், வெனிசுவெலா, மெக்ஸிக்கோ, பசுபிக் கடல், கலிஃபோர்னியா. |

# நட்சத்திரக் கூட்டத்துள் தூமகேது



## அறிவியற் கலசம்

பருக்கை 67


அநு.வை.நாகராஜன்

**அன்புச் செல்வங்களே!**

**வானில் காணும் பல்கோடி நட்சத்திரங்களில் சில வேளைகளில் பல அதிசயங்களைக் காண்கிறோம். அவற்றில் ஒன்றுதான், எரிநட்சத்திரம் எனும் தூமகேது. இஃது எரிநட்சத்திரங்களில் விசேடமாகக் காட்சி தருகிறது. அது பற்றி இங்கு பார்ப்போம். வாசியுங்கள். வாசித்தவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.**

**நன்றி.**

**வா**னில் நாம் காணக்கூடியதும் காண முடியாததுமான எண்ணற்ற விநோதங்கள் அற்புதமாகத் தோன்றியும் தோன்றாமலும் இருப்பதுண்டு. அதில் ஒன்றுதான், நட்சத்திரக் கூட்டத்துள் காணப்படும் 'கொம்ற்' எனப்படும் எரிநட்சத்திரமாகும். இது நட்சத்திரக் குழுமத்துள் (NEBULA) இருக்கும் வால் நட்சத்திரமாகும். எரிநட்சத்திரங்கள் வானில் அடிக்கடி காணப்படும். இவ் எரி நட்சத்திரங்களுள் சிறப்பான அம்சம் கொண்டதே தூமகேது எனும் வால் நட்சத்திரம். இது கணப் பொழுதில் தோன்றி மறையும். சிலவேளைகளில் அவ்வாறு நீண்ட பொழுது, சிறப்பான வால் போன்ற வாயுவைப் பீறிச் சிந்திய வண்ணம் நின்று மறையும். அத்தகைய வால் நட்சத்திரமே தூமகேது. அதன் தோற்றத்தால், பல துக்குறிகள் ஏற்படுவதுண்டு. இது மற்றைய எரி நட்சத்திரங்களைப் போலல்லாது நீண்ட வாலும், நீண்ட பொழுது நிற்கும் எரிநட்சத்திரம் ஆகும். இது பல ஆண்டுகளுக்கு ஒரு முறை தோன்றுவதுமுண்டு. இதற்கு மாறாக எரிநட்சத்திரம் அல்லது எரிகல் (COMET) அடிக்கடி வானில் தோன்றி அதிசொற்பவேளைக்குள் வந்த சுவடே



தெரியாமல் மறைந்து விடும்.

பொதுவாக-தூமகேது தோற்றத்தில் நீண்ட ஒன்று அல்லது இரண்டு வால்களும், நிறைந்த வாயுக்களும் (Gas) கொண்டு, நீண்ட காலம் நின்று மறையும். இஃதே இதன் சிறப்பாகும். இவை தவிர, எரிகல்லும் தூமகேதுவும் உற்பவத்தின் ஒரே மூலமே.

வானியலாளர் (Astromers) கூற்றுப்படி, இவ் எரிநட்சத்திரம் அல்லது எரிகல் அண்டவெளியில் வெகு தூரத்தில் உருவாகும். அவை அண்டவெளியில், வட்ட வடிவ உருவில் சூரிய மண்டலத்தில் (Solar System) முழுவதும் வியாபித்து விளங்கும் இயல்புடையது. இவ்வெரி வட்டம் சூரியனைச் சுற்றி, மற்றைய கோள்கள் போல் (Planet) சுழன்று வரும். எனினும், கோள்கள் வலம் வரும் சுற்றுப்பாதை (Orbit) க்கு வித்தியாசமாகத், தற்காலிகமாகச் சுழன்று வலம் வரும். இவற்றின் சுற்றுப்பாதை நீண்டும் நேராகவும் முட்டை வடிவத்தில் (Ovel Shape) உருவாகி சூரியனுக்கு அண்மையில், அண்டவெளியின் வெளி எல்லை வரை சூரிய மண்டலத்தில் அடங்கி நிற்கும்.

பெரும்பாலான எரிநட்சத்திரங்கள் எமது ஊனக் கண்ணால், வெளி வான்மண்டலத்தில் உலாவும்போது பார்க்க முடியாது. சூரியனை அவை அண்மையில் நெருங்கும் போதே அவற்றைக் காணமுடியும். அவை மிகக் குறுகிய நேரத்துக்குள்ளேயே தோன்றி மறைவதுமுண்டு.

எரிநட்சத்திரம் சூரியனை நெருங்கி வரும்பொழுது, சூரிய வெப்பம் காரணமாக அதில் பனிக்கட்டிகள் உருகி வாயுருவில் வெளிப்படும். அதேநேரத்தில், தூசி போன்ற சிறு துணிக்கைகள் (Particles) அங்கிருந்து வெளிப்பட்டு சூரியமண்டல வளி வெப்பத்தால் அவை வானில் துகள்களாக எறியப்பட்டு வீசப்படும். வெப்ப ஆவியும், தூசித் துகள்களும் எரிநட்சத்திரத்தின் வால் போன்று இணைந்து பல மைல் தூரத்துக்கு நீண்டு அம்பு போல் புறப்படும். இவ் வால் பல்லாயிரம் கிலோ மீற்றருக்கு, அது மேலும் நீண்டு பாயும். சிலவேளைகளில், எரிநட்சத்திரங்கள் ஒரு வாலுடன் அல்லது இரண்டு வால்களுடன் பிரிந்தோ, இணைந்தோ ஒரு மூலத்தில் உருவாகியதாகவும் தோன்றி நீளும். இதில் மெல்லிய வாலாகப் புறப்படும் வெப்ப ஆவியும் மற்றும் தூசித் துணிக்கைகளும் கொண்டு விரிவடைந்து தோன்றும்.

இச்செயற்பாடுகள் எரிநட்சத்திரத்தில் நிகழும்போது, வெப்ப ஆவியும், தூசிகளும் முகில்களாக உருவாகி சூரியக் கதிரில் எதிரொலிக்கும். அப்போதுதான் நாம் காணக்கூடியதாக எரிநட்சத்திரம் தெரியும்.

எரிநட்சத்திரங்கள் பலவற்றுக்கு எல்லாம் மிகப் பெரிய சுற்றுப்பாதைகள் (Orbits) இருக்கும். இத்தகைய சுற்றுப்பாதைகள் பல்லாயிரம் ஆண்டுகள் வரை சூரியனைச் சுற்றி வலம் வரும். அதேவேளை, சூரிய சுற்றுப்பாதைகள் குறுகிய காலங்கள் தோன்றி மறைவதுமுண்டு.

மேற்கூறிய குறித்த பெரிய சுற்றுப்பாதைகளில் ஒன்றே 'ஹெலி' எனும் எரிநட்சத்திரம் உலாவும். இந்த ஹெலி எரிநட்சத்திரம் 75 ஆண்டுகளுக்கு முன் உருவாகி, நம் கண்களுக்குத் தோன்றிய மிகப் பிரசித்தி பெற்ற எரிநட்சத்திரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஐம்பதாவது ஆண்டை நோக்கி....

ஐம்பதாவது ஆண்டை நோக்கி நகர்ந்து செல்லும் 'மல்லிகை' இம்மாத அட்டைப்படமாக 'எழுதி எழுதியே இயங்கும் பொறியியலாளர்' என்று மகுடமிட்டுக் கால்பதித்த எழுத்தாளர் சுதாராஜின் படத்தைப் பிரசுரித்துள்ளதுடன் அவரைப் பற்றிய தகவலடங்கிய ஆக்கத்தினையும் பிரசுரித்து அவரைக் கௌரவித்துள்ளது.

இவர் பற்றிய ஆக்கத்தினை கவிஞர் மேமன்கவி எழுதியுள்ளார்.

கனிவுமதியின் ஊர்திரும்புதல் (கவிதை), 'இன்கா'வின் செல் பேசும் வார்த்தைகள், கோ.போ.வின் செப்டம்பர் நினைவுகள் (11.09.2001) ஆம் திகதியில் அமெரிக்க வர்த்தக மத்திய நிலையத் தாக்குதல் சம்பந்தமான குறுந்திரைப்படம் பற்றியது. இதன் தயாரிப்பாளர்கள் வெளியீட்டாளர்கள், மேடையேற்றியோர் பற்றிய விபரம் குறிப்பிடப்படாமை ஒரு குறைபாடாகும்), விச.கஜனின் வாழ்ந்து செல்! (கவிதை), சு.சுதந்திரராஜாவின் நிழலில் நிஜம், அ.முகமது சமீம் எழுதியுள்ள தொ.மு.சி.ரகுநாதன் பற்றிய 'சில நினைவுகள்', மேமன் கவியின் நான்கு கவிதைகள் என்பனவும்,

மற்றும் திக்குவல்லை கமாலின் அரங்கேறும் அரைகுறைகள், செங்கை ஆழியானின் ஈழத்தின் புனைகதைப் படைப்பாளிகள் வரிசையில் அ.செ.முருகானந்தன், வரதர், அ.ந.கந்தசாமி, இரசிகமணி கனக செந்தில்நாதன், சு.வேலுப்பிள்ளை, கோகிலா மகேந்திரனின் கவிஞர் சோ.ப.வின் நினைவுச் சுவடுகள்-ஒரு பார்வை, வெ.முருகபூபதியின் இலக்கிய மடல், தெணியானின் பூச்சியம் பூச்சியமல்ல, டொமினிக் ஜீவாவின் தூண்டில் முதலான அம்சங்கள் இடம் பெற்றுள்ளன.

தனிப்பிரதி விலை ரூ.25,
தொடர்புகளுக்கு,
மல்லிகை,
201/4, ஸ்ரீ கதிரேசன் வீதி,
கொழும்பு-13,
தொ.பே : 2320721

# இளைஞர் உளமேம்பாட்டு நூல்

இன்றைய உலகில் மிகவும் புறக்கணிக்கப்பட்டுப் பாதிக்கப்பட்ட பிரிவினர்தான் இளைஞர் சனத்தொகையினர். பாடசாலைக் காலத்தில் வெளியுலகம் பற்றிய அறிவு கொஞ்சமும் இல்லாமல் படிப்பு, பரீட்சை என்று காலம் கழித்து விடுவதால் இளமைப் பருவத்தில் உலகத்தை எதிர் கொள்வதற்குப் பெரிதும் சிரமப்படுகிறார்கள் இவர்கள். இத்தகையவர்களுக்கென நூலொன்றை எழுதி வெளியிட்டுள்ளார் மூத்த எழுத்தாளர் தேவதாசன் ஜெயசிங்.

இந்நூலுக்குப் பதிப்புரை எழுதியுள்ள தாசன் வெளியீட்டக அதிபர் ஜே.ரூபராஜ் நூலாசிரியர் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

தனது வாழ்க்கை அனுபவங்களையும் அறிவுரைகளையும் கொண்டதாக நல்லதொரு படைப்பினை இளம் இதயங்களை ஊடுருவிப் பாயும் விதத்தில் அஞ்சல் அஸ்திரங்களாக ஆசிரியர் இந்நூலை அமைத்திருக்கின்றார் என்பதே சிறப்பானதாகும்.




அந்த வகையில், நாம் விட்டுச் செல்லும் ஒவ்வொரு சுவடுகளையும் தேடித் தொடரும் ஆயிரமாயிரம் இள நெஞ்சங்களின் தாகம் கருதி, இளைஞர் சமூக மேம்பாட்டு நூலான ஆரோகணத்தை தங்கள் இனிய கரங்களில் தருவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்நூலில் இளைஞர் சமூகத்துக்கு ஆலோசனையும், ஊக்கங்களும் வழங்கும் வகையில் இள நெஞ்சங்களே!, நீங்கள் யார்?, இருமுது குரவர், அறிவாலயம், இறைவழிபாடு, அடிச்சுவடுகள், நோக்கும் போக்கும், அருகாற் சிறு பரவை, நட்பும் நம்பிக்கையும், விமர்சனம், நில் கவனி, அட்சய பாத்திரம், சறுக்கல்கள், தீர்மானம், 'நிறைவாக.....' ஆகிய 15 சிறு கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. இளைஞர்கள் மட்டுமன்றிச் சகலரும் படித்துப் பயன் பெறலாம்.

விலை 125/= ரூபா.
கிடைக்குமிடம்
தாசன் வெளியீட்டகம்,
இல.16, கொவி ஜன சேவா மாவத்தை,
ஹலதன்துவன, தங்கொட்டுவ.
தொ.பே : 031-22591555,
0777-498250

# முற்று முழுதாக நாடக அரங்கியலுக்கான சஞ்சிகை

ஆற்றுகை சஞ்சிகையின் டிசம்பர் 2005 இற்கான இதழ் எமது பார்வைக்கு எட்டியது. 'ஆற்றுகை' திருமறைக்கலாமன்றத்தின் வெளியீடாகும். இவ் இதழ் முற்றுமுழுதான நாடக அரங்கியலுக்கான இதழாகவே அமைந்துள்ளது. மறைந்து போகும் இக்கட்டான நிலையில் உள்ள நாடக இலக்கியத்தினை வளர்க்கும் நோக்குடனும், இளம் சமுதாயத்தினை ஊக்கு விக்கும் விதமாகவும் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியதாக இவ்விதழ் வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ் இதழில் இந்திய தமிழக அரங்கவியல் அறிஞர்களான சே.இராமானுஜம், தி.பாலசரவணன், முனைவர் வ.ஆறுமுகம், எஸ்.பி.ஸ்ரீனிவாசன் ஆகியோரின் ஆக்கங்கள் இடம்பெறுகின்றன. இவ் இதழில் யோ.யோண்சன் ராஜ்குமார், கி.செல்மர் எமில், வை.வைதேகி ஆகிய மூவரும் பொறுப்பாசிரியராக செயற்பட்டுள்ளனர்.

மற்றும், சஞ்சிகையில் த.சிவகுமாரன், இ.ஜெயகாந்தன், யூ.பி.அ.றஞ்சித்குமார், பாக்கியநாதன் அகிலன், அரங்கநேசன், தார்மிக மற்றும் கி.செல்மர் எமில் ஆகியோரும் பங்களிப்புச் செய்துள்ளனர்.

பல்வேறு தலைப்புகளினூடாக நாடக கலாசாரத்தின் தொன்மை, அதன் பாரம்பரிய அம்சங்கள், நாடக வகைகள், மேடை அமைப்பு முறைகள், கத்தோலிக்க நாட்டுக் கூத்து மரபு, கூத்து வடிவம் வேண்டி நிற்கும் புத்தாக்க வழிமுறைகள், இசை நாடகங்கள் எதிர்நோக்கும் சவால்கள், ஒளி அமைப்புகள் போன்ற இளஞ் சமுதாயத்தவர் அறிந்திராத பல்வேறு விடயங்களை இவ்விதழில் அலசி ஆராயப்பட்டுள்ளன.

தே.அபிலாஷா

மேலும், நாடக வழக்கு எனும் நூலுக்கான அறிமுகம், அரங்கியல் தொடர்பாக வெளியான புதிய நூல்கள் பற்றிய விபரங்கள், மறைந்த 'மூத்த' நாடகவியலாளர்களுக்கான அஞ்சலிக் குறிப்புக்கள் என்பனவும் இடம் பெற்றுள்ளன.

'நாமும் நமக்கோர் நலியாக் கலையுடையோம். நாமும் நிறைந்த னது நாகரிக வாழ்வுக்கு நம்மால்




இயன்ற பணிகள் நடத்திடுவோம்'' எனும் மஹாகவியின் கூற்றினை மெய்ப்படுத்தும் வகையில் 'ஆற்றுகை' செயல்படுகின்றது என்றால் அது மிகையாகாது.

இவ் இதழின் விலை ரூ.50/=.
தொடர்புகளுக்கு,
நாடகப் பயிலகம்,
திருமறைக்கலாமன்றம்,
238, பிரதான வீதி,யாழ்ப்பாணம்.
தொலைபேசி மற்றும் தொலைநகல் : 021-2222393
மின்னஞ்சல் முகவரி :
**cpajaffna@sltnet.lk**
இணையத்தள முகவரி :
**www.cpartsteam.com**




## 'கலை அமுதன்' இக்பாலுக்கு கலாபூஷண விருது

இலங்கை அரசின் கலாசாரம், மரபுரிமைகள்துறை அமைச்சினால் வருடாந்தம் கலைஞர்களுக்கு வழங்கிக் கௌரவிக்கப்படும் கலாபூஷண விருது, ஆக்க இலக்கியத்துறைக்கு ஆற்றிய பங்களிப்புக்களைப் பாராட்டி இம்முறை பிரபல ஆக்க இலக்கியவாதியும், எழுத்தாளருமான கலை அமுதன் டாக்டர், அல்-ஹாஜ், எம்.ஸீ.எம்.இக்பால் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.


'கலை அமுதன்' இக்பால்

விருது வழங்கல் வைபவம் அண்மையில் கொழும்பு கலாபவனம், ஜோன் டி சில்வா அரங்கில் சலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள்துறை அமைச்சர் மஹிந்த யாப்பா தலைமையில் நடைபெற்றது.

1968 க்களில் எழுதத்தொடங்கிய கலை அமுதன் இக்பால், தனது கலை, இலக்கியப் பயணத்தின் 38 ஆவது வருடத்தை இப்போது நிறைவு செய்துள்ளார்.

கதை, கட்டுரை, கவிதை, விமர்சனம், ஆய்வுக்கட்டுரைகள், ஆத்மீகம், தத்துவம், மருத்துவம், சிறுவர் இலக்கியம் மற்றும் கிராமிய இலக்கியம் எனப் பல்துறைசார் ஆக்கங்கள் பலவற்றைப் படைத்துள்ள கலை அமுதன், பல நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

யுனிசெப் விருது, ஆளுநர் விருது மற்றும் உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டு விருது போன்ற பல சர்வதேச, உள்ளூர் விருதுகளை வென்றுள்ள இவர் பல சர்வதேச மாநாடுகளில் ஆய்வுக்கட்டுரைகளையும் சமர்ப்பித்துப் பாராட்டுக்களையும் பெற்றுள்ளார்.

மருத்துவத் தொழில் புரியும் கலை அமுதன் இக்பால், இதழியலில் இளமாணிப் பட்டம் பெற்றவராவார். விஜய் இதழில் அதிசய வனம் எனும் சிறுவர் தொடர் கதையை 21 அத்தியாயங்கள் எழுதி அமோக பாராட்டுக்களைப் பெற்றதோடு, இவரது பல சிறுவர் பாடல்கள், தொடர்ந்தும் விஜய்யில் வெளிவந்து கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

### நூல் அறிமுகம்

**எழுத்தாளர்கள், வாசகர்கள், "பொதிகை"க்கு ஆக்கங்கள், செய்திகள், படங்கள் என்பவற்றை அனுப்பி வைக்கலாம். ஆக்கங்கள் மிகச் சுருக்கமாக இருக்கவேண்டும். நூல் அறிமுகங்கள் செய்ய விரும்புவோர் நூலின் இரண்டு பிரதிகளை**
**நூல் அறிமுகம்,**
**ஆசிரியபீடம் த.பெ.எண் 2037, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதி செய்த வேலையா?



ஓர் ஊரில் ஒரு வணிகன் இருந்தான். அவன் ஒருநாள் காலை நேரத்தில் உடற்பயிற்சி செய்வதற்காகக் கடற்கரைக்குப் போனான். அங்கே ஒருவர் ஒரு வித்தியாசமான காரியத்தைச் செய்வதைப் பார்த்தான். அவர் ஒரு கோப்பையில் கடற்கரை மணலை நிரப்பி அதை தன் பின்னால் கொட்டிக் கொண்டு இருந்தார். அவர் முன்னால் பள்ளமாகவும் பின்னால் மேடாகவும் இருந்தது.

வணிகனுக்குக் குழப்பம். அவர் ஏன் இப்படிச் செய்து கொண்டிருக்கின்றார் என்று புரியவில்லை. நேரடியாக அவரிடமே போய் ''ஏம்பா இப்படி முன்னால் இருக்கின்ற மண்ணை எடுத்துப் பின்னாலே கொட்டியபடி இருக்கின்றாய்'' என்று கேட்டான். அவர் வணிகனை உற்றுப் பார்த்தார். பின்னர் ''நான்தான் விதி. ஒவ்வொரு மனிதனுக்கும் இன்று கிடைக்கவிருக்கும் உணவு எவ்வளவு என்பதை அளந்து கொண்டிருக்கின்றேன்'' என்று கூறினார்.

''உண்மையிலேயே உன்னால் அப்படிச் செய்ய முடியுமா'' என்று வணிகன் கேட்டான். ''முடியும்'' என்றார் அவர்.

''அப்படியானால் நான் இன்று மதியம் உணவு உண்பதை உன்னால் தடுத்து நிறுத்தி விடமுடியுமா'' என்று சவால் விட்டான். ''உன் விருப்பம் அதுவானால் அப்படியே செய்கின்றேன்'' என்றார் அவர். ''பார்க்கலாம்'' என்று கூறியபடி மீன் வாங்கிக் கொண்டு வீடு நோக்கிச் சென்றான்.

வீட்டில் மனைவியிடம் மீனைச் சமைத்து வைக்குமாறு கூறினான். அப்புறம் வியாபாரம் செய்யப் போய்விட்டான். மதியம் வீட்டுக்கு சாப்பிட வந்தான். மீன் குழம்பு, மீன் வறுவல் ஆகியவற்றோடு சோறு பரிமாறினாள் மனைவி. ''என் சாப்பாட்டை நிறுத்தி விடுவதாகச் சொல்லிச்சே அந்த விதி... இப்போது நான் சாப்பிடப் போகின்றேன். அதை எப்படி நிறுத்தும்'' என்று நினைத்தான். உடனே அவனுக்குச் சிரிப்பு வந்தது.





குபீரெனச் சிரித்தான்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த மனைவிக்குக் கோபம் வந்தது? ''நான் மீனைச் சமைத்த விதத்தைப் பார்த்துக் கேலி செய்து சிரிக்கிறார்' என்று நினைத்த அவள் ''யாராவது நல்லாச் சமைக்கிறவங்க வீட்டுக்குப் போய் சாப்பிடறதுதானே....இவ்வளவு நாள் என் சமையலைச் சாப்பிட்டபோது இந்தக் கேலி எங்கே போச்சு'' என்றெல்லாம் கேட்டு வணிகனைத் திட்டினாள். சம்பந்தமே இல்லாமல் பேசுகிறாளே என்று வணிகனுக்குக் கோபம் கோபமாக வந்தது. சாப்பாட்டுத் தட்டை வைத்து விட்டு வீட்டை விட்டு வெளியேறினான்.

இரண்டு மூன்று மணி நேரம் கழித்துக் கோபம் தணிந்த பிறகு தான் நடந்த விஷயம் அவனுக்கு விளங்கியது. விதி சொன்னபடி தன்னால் மதியம் சாப்பிட முடியவில்லை என்று புரிந்து கொண்டான்.

**தொகுப்பு : பா.டாருகீசன், தரம் - $6^{B}$, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.**

# விஞ்ஞான விளக்கங்கள்

1. தோடம்பழச்சாற்றுப் பானம் தயாரிக்கையில் சீனி சேர்க்க முன்னர் குவளையின் அடியில் காணப்படும் தோடம்பழ வித்துக்கள் சீனி சேர்க்கப்பட்ட பின்னர் மிதக்க ஆரம்பிக்கும்.

✸ தோடம்பழ வித்துக்கள் நீரிலும் அடர்த்தி கூட. எனவே, நீரில் அமிழும். நீரில் சீனியைக் கரைக்கும்போது நீரின் அடர்த்தி தோடம்பழ வித்துக்களின் அடர்த்தியை விடக் கூடும்போது தோடம்பழ வித்துக்கள் நீரில் மிதக்கும்.

2. விற்பனைக்குள்ள தையல் ஊசிகள் அலுமினியத்தாளால் சுற்றப்பட்டு இருக்கும்.

✸ அலுமினியம் இரும்பிலும் தாக்க வீதம் கூடிய உலோகமாகும். எனவே, இரும்பினால் செய்யப்பட்ட குண்டூசி அலுமினியத்தாளினால் சுற்றி வைக்கப்படும்போது இரும்பு அரிப்பில் இருந்து பாதுகாக்கப்படும்.

3. இறப்பர் தொழிற்சாலைக்கு அண்மையாக உள்ள நீரோட்டங்களில் பொதுவாகத் துர்நாற்றம் ஏன் ஏற்படுகின்றது?

✸ இறப்பர் தொழிற்சாலைக்கு அருகில் உள்ள நீரோட்டங்களில் கழிவு இறப்பர் பால் கலக்கலாம். இறப்பர் பாலில் அடங்கியுள்ள புரதம், சீனி போன்ற போசனைப் பொருட்கள் பற்றிரியாக்களின் வளர்ச்சிக்கு உகந்ததாக அமையும்.

✸ பற்றிரியாக்கள் பெருகும்போது புரதங்கள் சிதைவடையச் செய்யப்படுவதனால் துர்நாற்றம் ஏற்படுகிறது.

**றி.றியாஸா, தரம் - $10^{A}$,**
**தி/அந்நஹார் ம.ம.வி,**
**மூதூர்.**

# மஞ்சள் நிலா வா வா

மஞ்சள் நிலா வா வா
வானத்திலே தவழ்ந்து வா
கொஞ்ச நேரம் விளையாடலாம்
கூடவே தான் நீயும் வா.
குட்டிக் குட்டி நட்சத்திரம்
என்ன என்ன பேசுது?
கேட்டுக் கேட்டு வந்து அதை
என்னிடம் நீ சொல்லி விடு.....!
நான் பின்னால் ஓடும்போது
நீயும் என்னை தொடர்ந்து வா
மேகத்தையும் கூட்டி வா
மெதுவாக ஓடிடுவோம்.
அம்மா தந்த மிட்டாய் தாரேன்...
அருகினிலே வா! வா! வா!
தம்பிப் பாப்பா சாப்பிடணும்
தங்க நிலாவே வா! வா! வா!

**எம்.அஜித்குமார்,**
**தரம் - 05,**
**கொ/புனித அந்தோனியார் மஹாவத்தை.**





குட்டி குட்டி முயல் அண்ணா
குதித்துக் குதித்து ஓடுவதேன்?
பக்கம் நானும் வந்திட்டால்
பாய்ந்து ஓடி மறைவது ஏன்?
ஓட்டப் பந்தயம் தன்னிலே
ஓடித் தோற்ற கவலையோ
வாட்டமென்ன உந்தனுக்கு
வடிவாய் எனக்குச் சொல்லிடுவாய்.
ஆமையாரும் வரமாட்டார்
அப்பாவுந்தான் வரமாட்டார்
நாமும் ஓடிப் பார்க்கலாம்.
நாளை நானும் வரட்டுமா?

**சி.நிஷங்கன், தரம் - $7^{G}$,**
**மட்/இந்துக் கல்லூரி,**
**மட்டக்களப்பு.**

# ஓடிப் பார்ப்போமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னப் பூஞ்சிட்டுக்கள்

# பாலு கண்டுபிடித்த குமிழிகள்

ஓர் ஊரில் பாலு என்று ஒரு பையன் இருந்தான். அவன் எப்போதும் சவர்க்காரத்தில் குமிழிகள் உண்டாக்கி விளையாடுவான். நீங்களும் சவர்க்கார நுரையில் குமிழிகள் உண்டாக்கி விளையாடி இருந்தால் தெரியும், பாலுவுக்கு அதில் எவ்வளவு மகிழ்ச்சி இருக்குமென்று. அவன் ஒவ்வொரு நாளும் மரநிழலில் அமர்ந்து இருந்து குமிழிகள் விடுவது வழக்கம்

அவன் மிகவும் சந்தோஷமாக இருப்பான். சவர்க்காரக் குமிழிகள் உடையாமல் இருந்தால் மேலும் சந்தோஷமாக இருக்கலாமே என்றும் நினைப்பான்.

''நான் எவ்வளவு அழகான குமிழிகள் உண்டாக்குகிறேன். அவை வானத்தில் பறந்து சென்று வானவில்லின் நிறங்களைப் பெறுகின்றன. அவை மட்டும் உடையாமல் இருந்தால் எவ்வளவு நல்லது'' எனத் தனக்குத் தானே கூறிக்கொள்வான்.

பாலு உடையாத குமிழிகளை உண்டாக்க மிகவும் ஆசைப்பட்டான்.

குமிழிகள் குழாயில் இருந்து மெதுவாக செல்லும். சிறிது நேரத்தில் 'டொப்' என்ற ஒலி கேட்கும். அவன் திரும்பிப் பார்ப்பான். அவை ஒன்றும் அங்கே இருக்காது. அவை எல்லாமே வெடித்துச் சிதறிவிடும். இது அவனுக்குச் சோகமாக இருந்தது.

''பிள்ளைகள் இந்தக் குமிழிகளைக் கையில் பிடித்து விளையாட எவ்வளவு ஆசைப்படுவார்கள். ஆனால், இவ்வாறு உடையும் குமிழிகளினால் என்ன பயன்'' என அவன் நினைத்தான்.

பாலு இவ்வாறு நினைத்துக் கொண்டு வரும்போது அவனுடைய நண்பன் ராமுவைச் சந்தித்தான். ராமுவின் வேலை ஒட்டும் பசை செய்வது. அவனுக்கு வேறொன்றிலும் விருப்பம் இல்லை.

ராமு பாலுவைப் பார்த்து ''நீ ஏன் சோகமாய் இருக்கிறாய்?'' எனக் கேட்டான்.

அதற்கு ராமு, ''நான் எவ்வளவு சவர்க்காரக் குமிழிகள் ஊதினாலும் அவை உடைகின்றன. அதனால், எனக்கு என்ன பயன்? நான் தேவையில்லாமல் நேரத்தை போக்குகிறேன்'' என பாலு கூறினான்.

அதற்கு ராமு ''இல்லை அப்படிக் கூறாதே. ஒருநாள் உன்னால் உடையாத குமிழிகள் உண்டாக்க முடியும். கவலைப்படாதே'' என்றான்.

பாலு ''சரி அதற்கு நீ எனக்கு உதவி செய்வாயா?'' எனக் கூறி பாலு ஒரு குமிழியை ஊதினான். அது நன்றாகப் பெரிதாக வந்தது. அவன் அதை இன்னும் பெரிதாக ஊத அது 'டொப்' என வெடித்தது.

பாலு மீண்டும் ஒரு குமிழியை ஊதினான். அது ராமு கையில் இருந்த பசை ஜாடியில் விழுந்தது. அப்போது பலத்த காற்று வீசியது. அந்தக் குமிழி வெகுதூரம் பறந்து சென்றது. இதனைக் கண்ட ராமுவுக்கும், பாலுவுக்கும் பெருமகிழ்ச்சி. அந்தக் குமிழி உடையவே இல்லை!

பாலு மீண்டும் ராமுவின் பசையின் மீது ஒரு குமிழியை ஊதினான். அது பசையின் மேல் பட்டுத் திரும்பவும் காற்றில் அடித்துச் செல்லப்பட்டது. இவ்வாறு பாலு பல குமிழிகளை ஊதிக் கொண்டே சென்றான். அதேசமயம் ராமுவும் பல விதமான மரங்களின் பாலை ஒன்று சேர்த்துப் பசை செய்து கொண்டு இருந்தான். பசைக்கு நிறமிட்டதும் குமிழிகள் பல வர்ணங்களில் வரத் தொடங்கின.

பாலு கடைசியாக ஒரு நூலை ஒரு பெரிய பச்சை நிறக் குமிழியில் கட்டத் தொடங்கினான். பின் கயிற்றைப் பிடித்துக் கொண்டு ஊர் முழுவதும் திரிந்தான்.

ஊர்ப் பிள்ளைகள் அனைவரும் ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர். அவர்கள் எங்களுக்கும் இவ்வாறு ஒரு குமிழி தந்தால் உனக்கு இரண்டு ரூபா தருகிறோம் என்றனர்.

பாலுவும், ராமுவும் மறுநாளே குமிழிகள் விற்கத் தொடங்கினர். எவ்வளவு பிள்ளைகள் குமிழிகள் வாங்க வந்தார்கள். தெரியுமா? பாலுவின் பணப்பையை அவனால் தூக்க முடியாத அளவு பாரமாக இருந்தது.

இந்த உடையாத குமிழிகள் எது எனத் தெரியுமா? நான் நினைக்கிறேன் உங்களுக்கு அது என்னவென்று தெரியும். அவைதான் நீங்கள் அனைவரும் விரும்பும் பலூன்கள். உங்களுக்கு அடுத்த முறை ஒரு பலூன் கிடைக்கும்போது பாலுவையும், ராமுவையும் நினைவு கூருங்கள். அவர்கள் தான் பலூனைக் கண்டு பிடித்தவர்கள்.

- எஸ்.ஷர்மினி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மர்மக் கடல் பெர்மி

## கப்பல்களும், விமானங்களும் இக்கடற் பகுதியில் மர்மமான முறையில் காணாமற் போகின்றன




அமெரிக்க கரிபியன் கடற் பிரதேசத்தில் காணப்படுகின்ற பெர்மியூடா முக்கோணப் பிரதேசத்தில் இடம்பெறும் மர்மமான செயல்களுக்கு இன்னமும் காரணங்கள் கண்டுபிடிக்கப்படாமலிருக்கின்றன. அந்தளவுக்கு பெர்மியூடா முக்கோணப் பகுதியில் கப்பல்கள், விமானங்கள் காணாமற் போவது உலக மக்களைப் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருந்தது எனலாம்.

இந்த பெர்மியூடா முக்கோணக் கடற்பரப்புப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். இன்னும் சிலருக்கு இது புரியாத புதிராகவும் இருக்கலாம். உங்களுக்கு மாத்திரமல்ல; இன்று உலகிலுள்ள சில விஞ்ஞானிகள் கூட இந்த மர்மம் புரியாமல் குழம்பிக் கொண்டு தான் இருக்கிறார்கள். எவ்வாறாயினும், பெர்மியூடா முக்கோணம் பற்றியே அனைவராலும் பேசப்பட்டது; 19 ஆம் நூற்றாண்டில் அப்பகுதியினூடாகப் பயணித்த கப்பல்களும், விமானங்களும் ஒன்றன் பின் ஒன்றாய் தொடர்ந்து காணாமற் போனதையடுத்தே ஆகும்.

விமானங்களையும், கப்பல்களையும் விழுங்கும் கடற்பரப்புத் தான் 'பெர்மியூடா முக்கோணப்' பகுதி என்றழைக்கப்படுகின்றது. அமெரிக்காவுக்குத் தெற்கே அத்திலாந்திக் கடற்பகுதியிலுள்ள பெர்மியூடா, அமெரிக்காவின் மியாமி மற்றும் போர்ட்டோரிகோவில் சென் ஜுவன் ஆகிய பிரதேசங்களை மானசீகமாக இணைப்பதனால் இந்த முக்கோணக் கடற்பரப்புக் கிடைக்கின்றது. இதனாலேயே 'பெர்மியூடா முக்கோணம்' என்கின்றனர். இந்தக் கடற்பரப்பினூடாகப் பயணித்து எவ்விதத் தடயங்களுமின்றிக் காணாமற் போன கப்பல்கள், விமானங்கள், சிறிய படகுகள் ஏராளம். இதனால், அநேகமான விமானிகளும் மாலுமிகளும் இப்பகுதியைத் தவிர்த்து தமது பயணங்களைத் தொடர்வதில் அதிக கவனம் செலுத்தி இருக்கின்றனர். ஆனால், இன்றுவரை இந்தக் காணாமற் போகும் மர்மம் தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றது. இதனால், இக்கடற்பரப்பு 'பேய்க்கடல்' என்றும் அழைக்கப்படுகின்றது.

இது பற்றி நாடு காண் பயணியான 'கிறிஸ்தோபர் கொலம்பஸ்' வெளியிட்டிருந்த மிகப் பழைமையான தகவலொன்றில் 'சேர்காஸோ' எனும் கடலைக் கப்பலில் கடந்து சென்று கொண்டிருக்கும் போது, அக்கடலில் நிறைந்திருந்த கடற்களைகள் (கடற்தாவரங்கள்) தமது கடற்பயணத்துக்குப் பெரும் இடைஞ்சலை ஏற்படுத்தியிருந்தது என்று குறிப்பிட்டிருந்தார். அத்தோடு இக்கடற்பிரதேசத்தினூடாக வான் வழியாக விமானங்களில் பயணித்த விமானிகளும் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டதாக அனுபவ ரீதியாக எழுதியுள்ளனர். எனினும், 1918 ஆம் ஆண்டில் யூ.எஸ்.எஸ். ஸைக்லொப் என்ற அமெரிக்கக் கப்பலும், 1945 ஆம் ஆண்டு டிசம்பர் 5 ஆம் திகதி அமெரிக்க டார்பிடோ குண்டுத் தாக்குதல் விமானங்கள் ஐந்தினை உள்ளடக்கிய 'ஃப்லைட் 19' என்ற விமானத் தொகுதியும் பெர்மியூடா முக்கோணக் கடற்பரப்பில் காணாமற் போனதை அடுத்தே அனைவரின் கவனமும் இதன்பால் திரும்பியது. அத்துடன் இந்தக் காணாமற் போன விமானங்களைத் தேடிச் சென்ற விமானங்களும் காணாமற் போயின. தொடர்ந்து பல சரக்குக் கப்பல்கள், பயணிகள் கப்பல்கள் என்பன காணாமற் போனதோடு பெர்மியூடா முக்கோணக் கடற்பகுதியின் மர்மங்கள் உலகம் பூராகவும் பரவலாயிற்று. அப்பகுதி ஆபத்துப் பகுதியாகவும் அறிவிக்கப்பட்டது.

**இந்தப் பிரதேசத்தினூடாகப் பறக்கின்ற விமானங்கள் பகல் வேளைகளிலேயே காணாமற் போவதாகத் தெரியவந்துள்ளது. சீரான காலநிலை நிலவும் வேளையில் திடீரெனத் தொலைத்தொடர்பு சமிக்ஞைகள் நின்று விடுவதோடு விமானம் கட்டுப்பாட்டினை இழந்து காணாமற் போவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.**

### எவ்வாறு காணாமற் போகின்றன?

'பெர்மியூடா முக்கோணம்' பற்றி இதுவரை வெளியாகியுள்ள தகவல்களின் படி, இதேபோன்று கப்பல்களிலுள்ள திசை காட்டி கருவியின் முள் நிலையற்று ஆடுவதோடு கப்பல்களின் போக்கைக் கட்டுப்படுத்துவது கடினமாகவும் இருக்குமாம். அடுத்துக் கடலலைகள் கொந்தளித்து நடுக்கத்தால் கப்பல்கள் தத்தளிக்கும். கடற்சுழிகள் மேலெழுந்து அடிக்கும். அதன் பின்னர் தொலைத்தொடர்பு சாதனங்கள் முற்றாகச் செயலிழந்து விடுவதாகவும் கூறப்படுகின்றன.



எனினும், இப்பிர
விமானிகளினதும், ம
திகழ்கின்றது என்று ஒ
அத்துடன் ஏனைய கட
பெர்மியூடாவிலேயே
இவர்கள் குற்றம் சாட்
பிழையானது என்றும்
எதிர்கொண்டிருக்கல

சிலர் இந்தக் கடற்
கூறுகின்றனர். இதற்கு
தரைக்கட்டுப்பாட்டுப்
காட்டாகும். "வானத்
என்பதே அவர் பேசி
வரவில்லை என்கின்
தொடர்ந்து நாளடை
வானில் ஏற்படும் மா
அதிர்ச்சிக்குள்ளாக்கி
இன்று வரை இக்கடற்
விமானங்கள் காணா
ஆராய்ச்சிகள் மேற்
இரசாயனச் செயற்பா
ஏற்படலாம் என்ற கரு

அத்துடன் அக்கட
திடீரென நீரில் பள்ள
வேற்றுக்கிரக விமான
நிறுத்தப்பட்டிருப்பதா
கப்பல்களும் விமான
ார்க்கப்படுவதாயும் இ

இ
கப்

பல்வேறு சந்தர்ப்ப
விமானங்களும் காண
19' காணாமற் போன
கணக்கெடுப்பு ஆரம்
விமானங்கள் காணா
காணாமற் போன வி
தனி ஒருவரால் ஓட்டி
ஆண்டு டிசம்பர் மாத
விமானத்தில் பயணி
அப்பகுதியில் இடம்


2004 இல் மேலும்

Digitized by Noolaham Foundation
noolaham.org

எனினும், இப்பிரதேசத்தில் நடக்கின்ற அனைத்து விபத்துக்களுக்கும் விமானிகளினதும், மாலுமிகளினதும் கவனயீனமே பிரதான காரணமாகத் திகழ்கின்றது என்று ஒரு சில ஆராய்ச்சியாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். அத்துடன் ஏனைய கடற்பரப்புகளில் நடக்கின்ற விபத்துக்களும் இந்தப் பெர்மியூடாவிலேயே நடக்கின்றதாகத் தவறான செய்திகளும் வெளியிடப்படுவதாக இவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். இன்னுமொரு சிலர் விமானங்கள் பயணித்த திசை பிழையானது என்றும் அதனால் அவர்கள் இவ்வாறான பிரச்சினைகளை எதிர்கொண்டிருக்கலாம் என்றும் கூறுகின்றனர்.

சிலர் இந்தக் கடற்பரப்புக்கு மேலாக வானில் ஒரு துளை இருப்பதாகவும் கூறுகின்றனர். இதற்கு அமெரிக்காவைச் சேர்ந்த 'கவாஷினி' என்ற விமானி தரைக்கட்டுப்பாட்டுப் பிரிவினருடன் கடைசியாகப் பேசியது சிறந்த எடுத்துக் காட்டாகும். ''வானத்தில் ஏதோ நடக்கின்றது...!வானம் திறந்து கொண்டது..!'', என்பதே அவர் பேசியது. அதன் பின்னர் அவரிடமிருந்து ஒரு செய்தியும் வரவில்லை என்கின்றனர் தரைக்கட்டுப்பாட்டுப் பிரிவினர். இதைத் தொடர்ந்து நாளடைவில் இன்னும் சில விமானங்கள் காணாமற் போயின. வானில் ஏற்படும் மாற்றங்கள் பற்றி அவர்கள் கூறியவை விஞ்ஞானிகளை அதிர்ச்சிக்குள்ளாக்கிக் கொண்டிருந்தன. இரண்டாம் உலகப் போரிலிருந்து இன்று வரை இக்கடற்பரப்பினூடாகப் பறந்த சில அமெரிக்க, ஜப்பானிய விமானங்கள் காணாமற் போய்க் கொண்டிருக்கின்றன. எனினும் இது பற்றிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் இதுவரை கண்டறியப்படாத சில இரசாயனச் செயற்பாடுகளினால் வானில் அவ்வாறானதொரு பாரிய துளை ஏற்படலாம் என்ற கருத்தும் நிலவுகின்றது.

அத்துடன் அக்கடற்பரப்பில் அதிகளவு மீதேன் கலந்திருப்பதனால் திடீரென நீரில் பள்ளத்தாக்குகள் ஏற்படுவதாகவும் நம்புகின்றனர். அத்தோடு வேற்றுக்கிரக விமானங்கள் இந்தப் பெர்மியூடா கடற்பரப்பில் நிறுத்தப்பட்டிருப்பதாகவும் இதனால், இவ்வழியே பயணிக்கின்ற கப்பல்களும் விமானங்களும் அவற்றிலுள்ள காந்தங்களினால் ஈர்க்கப்படுவதாயும் இருக்கலாம் என்றும் கருத்துத் தெரிவிக்கின்றனர்.





ஃப்லைட் 19





# ...மியூடா

## ...குதியில்

## ...கின்றன...

## இதுவரை காணாமற் போன கப்பல்களும் விமானங்களும்

பல்வேறு சந்தர்ப்பங்களிலும் இப்பிரதேசத்தினூடாகப் பயணித்த கப்பல்களும் விமானங்களும் காணாமற் போயிருப்பினும் கூட, 1945 ஆம் ஆண்டில் 'ஃப்லைட் 19' காணாமற் போனதை அடுத்தே அதுவரை மர்மமாக மறைந்தவை பற்றிய கணக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்டது. 1945 இலிருந்து இன்றுவரை சுமார் 130 விமானங்கள் காணாமற் போயுள்ளன. இதில் 1949-1987 வரை மட்டும் காணாமற் போன விமானங்களினதும் கப்பல்களினதும் எண்ணிக்கை 41. இதில் தனி ஒருவரால் ஓட்டிச் செல்லப்பட்ட சிறிய விமானங்களே அதிகம். 1948 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28 ஆம் திகதி NC-16002, Douglas DC-3 என்ற விமானத்தில் பயணித்த 31 பயணிகளும் காணாமற் போனமையே இதுவரை அப்பகுதியில் இடம்பெற்ற பெரிய விமான விபத்தாகும்.

2004 இல் மேலும் மூன்று விமானங்கள் மர்மமாய் மறைந்த போதும் இதுவரை அவை பற்றிய சரியான தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

இக்கடற்பரப்பில் இதுவரை 50 இற்குட்பட்ட கப்பல்கள் காணாமற் போயுள்ளன. 1918 இல் யூ.எஸ்.எஸ். ஸைக்லொப் என்ற கப்பல் 309 பயணிகளுடன் காணாமற் போனது. இது உலக கடற் பயண வரலாற்றில் மிகப் பெரிய மர்மமாகக் கருதப்படுகின்றது. மேலும் 1980 ஆம் ஆண்டில் ஒரு லட்சத்து அறுபத்தொன்பது டொன் எடை கொண்ட கப்பலொன்றும், அதற்கு முன்னர் இரண்டு லட்சத்து முப்பதாயிரம் டொன் எடை கொண்ட கப்பலொன்றும் கிட்டத்தட்ட ஒரே இடத்தில் காணாமற் போயுள்ளன. எனினும் அதற்குரிய எந்தவொரு தடயமும் கிடைக்கவில்லை. ஆக, இந்த மர்மக் கடற்பரப்பு காணாமற் போகின்றமைக்கான சாட்சியங்களையும் அழித்து விடக்கூடியன.

இதே வேளை, பெர்மியூடா முக்கோணப் பகுதியைப் போன்ற இன்னொரு முக்கோணக் கடற்பரப்பு இருப்பது தெரிய வந்துள்ளது. ஜப்பானியர்கள் இதனைப் 'பேய்க் கடல்' என்கின்றனர். இங்கும் பல கப்பல்களும் விமானங்களும் காணாமற் போயுள்ளனவாம். பழங்கால ஜப்பானியர்கள், கடலுக்குள் இருக்கும் 'ட்ராகன்' எனும் ராட்சத மிருகம் செய்யும் நாசகார வேலையே இதற்குக் காரணம் என்று கருதினர். ஆனால், அதையும் தாண்டி இவ்விரு பிரதேசங்களையும் ஒப்பிட்டு விஞ்ஞானிகள், புவியியல் ஆராய்ச்சியாளர்கள், பௌதீகவியலாளர்களும் இந்தக் காணாமற் போவதற்கான சில விஞ்ஞான ரீதியிலான முடிவுகளுக்கு வந்துள்ளனர்.

## விஞ்ஞான ரீதியிலான முடிவுகள்

இதுவரை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள தீர்மானத்தின் படி, பெர்மியூடா பகுதியில் நடக்கின்ற விபத்துக்களுக்கு அப்பகுதியின் சூழல் சமநிலையில் ஏற்படும் திடீர் மாற்றங்களே காரணம் எனக் கூறப்படுகின்றது. அத்தோடு இவ்விரண்டு முக்கோணக் கடற்பரப்புகளும் பூமியின் நேரெதிர்ப் பகுதியில் அமைந்துள்ளன. இரண்டு பகுதியும் இமய மலையையும் மூழ்கடிக்கக் கூடியளவுக்கு மிகவும் ஆழமானகடற்பகுதிகள். பூமியின் காந்த விசைக் கோடுகளிலும் இரண்டு பகுதிகளும் ஒன்றுக்கொன்று ஒத்துப்போவதில்லை. இதனால் விமானங்கள், கப்பல்கள் பயணிக்கும் போது திசைகளில் குழப்பம் ஏற்படுகின்றது. மேலும் இப்பகுதியில் இருக்கும் காந்த விசை காரணமாகக் கப்பல்கள், விமானங்கள் கடலுக்குள் ஈர்க்கப்படுவதாயும் இருக்கலாம் என்றும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

மேலும் ஒரு சிலர், இவ்விரண்டு பகுதிகளும், குளிர் கடலும் வெப்பக் கடலும் சங்கமிக்கும் பகுதியாகும். வெப்ப ஏற்ற இறக்கம் காரணமாக இங்கு மின்னோட்டம் ஏற்படலாம். வட, தென் துருவ விசையின் மீது இம்மின் விசையின் செயற்பாடு ஓரளவுக்கு பாதிப்பை ஏற்படுத்தவும் கூடும். இதனால், அந்த இடத்தில் காந்த விசை மிக அதிகளவில் இருக்கும். எனவே எவ்வளவு கனமான பொருளையும் சுலபமாக ஈர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும் என விளக்கம் கூறியிருக்கின்றனர்.

இந்தக் காந்த விசை ஈர்ப்பினால் அவ்வழியாகப் பயணிக்கும் விமானத்தின் அல்லது கப்பலின் பயணிக்கும் திசை முற்றிலும் வேறுபடக் கூடும். இவ்வாறான ஒரு நிலைமையின் போது சிலர் தம்மையறியாமலேயே தரையை நோக்கிச் செல்வதாய் எண்ணி ஆழமான கடலுக்குள் பிரவேசிக்கின்றனர்.

பௌதிகவாதிகளும், விஞ்ஞானிகளும் புவிக் காந்த மண்டலத்தின் செறிவினாலேயே கப்பல்களும், விமானங்களும் கடலுக்குள் ஈர்க்கப்படுகின்றன என்கின்றனர். புவியியல் அறிஞர்களோ அந்த ஆழமான கடற்பரப்பில் அடிக்கடி நிலநடுக்கம், எரிமலை வெடிப்புக்கள் ஏற்படுவதனால் இவ்வழியில் பயணிப்பவைகள் கடலுக்குள் சங்கமித்திருக்கலாம் என்கின்றனர். தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களும் இன்னும் சிலரும் இது வேற்றுக்கிரகவாசிகளின் செயலாக இருக்கலாம் எனக் கருத்துத் தெரித்திருக்கின்றனர். இவை அனைத்தும் எமக்குப் புதுப்புது தகவல்களை வெளிப்படுத்தினாலும் கூட இந்தக் 'காணாமற் போவது' தொடர்ந்து கொண்டிருப்பதும், இதற்கு இன்னமும் திட்டவட்டமான முடிவு காணப்படவில்லை என்பதும் திடமான உண்மைகளாகும்!

- நுஸ்பா கௌஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







தென் ஆசிய வலயத்தின் மிகப் பெரியதும், சக்தி மிக்கதுமான வல்லரசாக இருப்பது இந்திய நாடாகும். எம்நாட்டுக்கு மிக அண்மையில் அமைந்துள்ள இந்நாட்டுடன் இலங்கை ஆதிகாலம் முதல் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளது. இந்திய நாட்டைப் பாரதம், ஜம்புதுவீபம் மற்றும் திம்பதிவ என்னும் பெயர்களால் அழைக்கிறார்கள். ஆரம்பகாலத்தில் இலங்கை இந்தியாவுடன் நிலப்பரப்பு ரீதியாக இணைந்திருந்ததாகவும் காலப்போக்கில் பல்வேறு புவிச்சரிதவியல், கண்டநகர்வுக் காரணிகளால் பிரிந்ததாகவும் நம்பப்படுகின்றது. எமது நாட்டின் அரசியல், சமூக, பொருளாதார, சமய மற்றும் கலாசாரத்தில் இந்திய உப கண்டத்தின் செல்வாக்கு அதிகமாக உள்ளது.

சுமார் 5000 வருடங்களுக்கு முன்பு உலகின் மிகப் பழைமையான நாகரிகத்தைக் கொண்ட நாடாக இந்தியா விளங்கியது. கி.மு 1500 ஆம் ஆண்டளவில் இந்தியாவிற்கு வந்த ஆரியர் இந்தியாவின் வடமேற்குப் பகுதியிலுள்ள இந்து நதிப்பாள்ளத்தாக்கில் குடியேறித் தமது நாகரிகத்தை உருவாக்கினார்கள். இதன் காரணமாக அங்கு மொஹஞ்சதாரோ, ஹரப்பா என்ற இரு நகர்கள் உருவாகின. 8 ஆம் நூற்றாண்டளவில் அராபியர் இந்தியாவிற்குப் படையெடுத்து வந்து நாட்டைக் கைப்பற்றினர். பின் 12 ஆம் நூற்றாண்டளவில் குர்திஷ் இனத்தவர்களும், 15 ஆம் நூற்றாண்டளவில் ஐரோப்பியரும் இந்தியாவைத் தமது ஆதிக்கத்தின்கீழ் வைத்திருந்தனர். 19 ஆம் நூற்றாண்டளவில் ஆங்கிலேயர் இந்தியாவைக் கைப்பற்றினர். இவ்விதம் காலத்திற்குக் காலம் ஒவ்வொரு இனத்தவர்கள் இந்தியாவைக் கைப்பற்றி ஆண்டு வந்தனர். 1947 ஆம் ஆண்டு இந்தியா பிரித்தானியரிடமிருந்து சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டது.

சிலகாலங்களின் பின்பு இந்தியா ஐந்து பிரிவுகளாகப் பிளவு பட்டது. இந்தியா பாகிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், நேபாளம் என்பவையாகும். இன்று இந்தியா என அழைக்கப்படும் நாடு வடக்கே இமய மலையையும், தெற்கே கன்னியகுமரி முனையையும், மேற்கே பாகிஸ்தானையும், கிழக்கே பங்களாதேஷயும் எல்லைகளாகக் கொண்டுள்ள நிலப்பகுதியாகும்.

## புவியியல் அம்சங்கள் தரைத்தோற்றம்

இந்தியாவின் பரப்பளவு 3,165,596 சதுரக் கிலோமீற்றராகும். இதன் கடற்கரையோரமானது 7000 கிலோமீற்றர் நீளத்தைக் கொண்டது. இந்தியாவின் பௌதிக அம்சங்களை 3 பிரிவுகளாகப் பிரித்து நோக்கலாம்.


1. வடக்கே அமைந்துள்ள இமயமலை மற்றும் அதனுடன் தொடர்புடைய மலைகள்.
2. இந்து, கங்கைச் சமவெளிகள்.
3. தக்கண மேட்டுநிலமும், கரையோரப் பிரதேசமும்.

உலகின் மிக உயர்ந்த மலையாகக் கருதப்படும் 'எவரெஸ்ட்' மலை இமயமலைத் தொடரிலேயே அமைந்துள்ளது. இது 8843 மீற்றர் உயரமுடையது. இந்தியாவின் பிரதான நதிகளான கங்கை, இந்து என்ற இரு நதிகள் இம்மலையிலேயே உற்பத்தியாகின்றன.

இந்து, கங்கை என்ற இரு நதிகள் மிகப் பெரிய பிரதேசத்தை வளமூட்டுகின்றன. யமுனா நதி, கங்கையின் கிளை நதியாகும். கங்கை நதியை ஒரு புனித நதியாக இந்துக்கள் கருதுகின்றனர். மேற்கு மற்றும் கிழக்குப் பகுதியில் தக்கண மேட்டு நிலம் அமைந்துள்ளது. தெற்கில் நீலகிரிக் குன்றுகள் அமைந்துள்ளன. இப்பிரதேசத்தில் கோதாவாரி, கிருஷ்ண மகாநதி, நர்மதா, தப்தி, காவேரி, துங்கபத்ரா நதிகள் ஊற்றெடுக்கின்றன.

## காலநிலை

நாட்டின் உயர வேறுபாட்டிற்கமைய காலநிலையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இந்தியாவின் சில பகுதிகளில் முக்கியமாகத் தென்மேற்கு மற்றும் தென் கிழக்குப் பகுதிகளில் அயனமண்டல பருவக்காற்றுக் காலநிலை காணப்படுகின்றது. வடக்கு மற்றும் வடகிழக்கு, வடமேற்குப் பகுதிகளில் ஈரலிப்பான உலர் காலநிலை காணப்படுகின்றது. இந்தியாவில் 'தார்' பாலைவனப் பகுதிகளில் பாலைவனக் காலநிலை காணப்படுகின்றது. இங்கு சராசரி வெப்பநிலை 27°C ஆக உள்ளது. ஒக்டோபர் மாதம் முதல் மார்ச் வரை வறண்ட காலநிலை காணப்படுகின்றது. ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரை வறண்ட கோடைக் காலநிலை காணப்படும். வருட மழைவீழ்ச்சி 2100mm ஐ விட அதிகமாக உள்ளது. இந்தியாவின் பல பகுதிகளில் பருவக் காற்று மூலம் மழையைப் பெறுகின்றன.




## தாவரம் மற்றும் விலங்குகள்

இந்தியாவின் மேற்குக் கரையோரப் பகுதிகளில் அயனமண்டல மழைக்காடுகளைக் காணலாம். மரங்கள் 30 மீற்றரை விட உயரமானவைகளாக வளர்கின்றன. இக்காடுகளில் சந்தனம், கருங்காலி, றப்பர் போன்ற மரங்கள் அதிகமாக உள்ளன. இந்தியாவின் வட, வட கிழக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் பருவக் காற்றுக் காடுகளைக் காணலாம். தேக்கு, அகேஸியா போன்ற மரங்கள் இங்கு அதிகமாக வளர்கின்றன. அடர்த்தி குறைந்த மற்றும் உயரம் குறைந்த மரங்களையும் இங்கு காணலாம். விலங்கு மற்றும் பறவையினங்களைப் பொறுத்தவரை 33% மானவை. இந்நாட்டிற்கு உரித்தான விலங்குகளாக உள்ளன. எருமை, கழுதை, சிறுத்தை, சிங்கம், புலி, யானை, கரடி, மயில், குரங்கு என்பன இங்கு வாழும் விசேடத்துவ விலங்கு மற்றும் பறவைகளாகும். இந்தியாவின் 'போபெட்' தேசிய வன விலங்குப் பூங்கா முக்கியமான விலங்கு மற்றும் பறவைக் காப்பகமாக விளங்குகிறது.

## இயற்கை வளங்கள்

நிலக்கரி, லிக்னைட், தங்கம், இயற்கை வாயு, வளமான மண், பெற்றோலியம், இரும்பு என்பன இந்நாட்டின் இயற்கை வளங்களாகும். இதனை அடிப்படையாக வைத்துக் கைத்தொழில்கள் உருவாகியுள்ளன. போக்சைட், குரோமைட், செம்பு, வெள்ளி, மங்க்னீஸ்சியம், ஈயம் என்பன இந்தியாவின் பல பகுதிகளில் காணப்படுகின்றன. உலோகமில்லாத கனியங்களை களிமண், வைரம், கிரனைட், டங்ஸ்ரன், உப்பு, மைக்கா, சுண்ணக்கல், யுரேனியம், கிரபைட், ஜிப்சம் போன்றனவும் பரவலாக இங்கு காணப்படுகின்றன.

(மிகுதி அடுத்த வாரம்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு!

மகிழூர் என்ற ஊரில் காந்தன் என்ற ஏழை விவசாயி வாழ்ந்து வந்தான். அவனிடம் பெரிதாக சொத்துச் சுகம் எதுவும் கிடையாது. ஆயினும், எதிர்காலத்திற்குத் தேவைப்படும் என்பதற்காகச் சிற்சில பொருட்களை சொத்துக்களாக அவன் சேர்த்து வைத்திருந்தான்.

இப்படி இருக்கையில் காந்தன் அவசரத் தேவையின் நிமித்தமாகத் தூர ஊரொன்றிற்குச் சென்று வர வேண்டியிருந்தது. சென்று வருவதற்கு எப்படியும் இரண்டு நாட்களாவது செல்லும். வீட்டைப் பூட்டி வைத்து விட்டுச் சென்றாலும், தன்னிடமிருந்த ஒருசில பொருட்களையேனும் வீட்டில் விட்டுச் செல்வதற்கு அவனுக்கு மனமிருக்கவில்லை. எனவே, அவை அனைத்தையும் ஒரு பெட்டியினுள் வைத்துப் பூட்டி அந்தப் பெட்டியுடன் ஊரிலுள்ள பண்ணையாரின் வீட்டிற்குச் சென்றான்.

சென்றவன், பண்ணையாரிடம் தனது பிரச்சினையைக் கூறினான். அதற்குப் பண்ணையார், ''நீ கவலைப்படாதே..... உனது சொத்துக்களடங்கிய இந்தப் பெட்டியை எனது வீட்டில் வைத்து விட்டுப் போ... நான் [illegible]திரமாக வைத்து விட்டு நீ வரும்போது திருப்பித் தருகிறேன்...'' என்றார் அவர்.

காந்தனுக்கு இது பெரும் ஆறுதலாக இருந்தது? ''அப்படியே ஆகட்டும் பண்ணையாரே.... உங்களுடைய இந்த உதவியை நான் என்றும் மறக்கமாட்டேன். இதோ எனது பெட்டி.... திரும்பி வரும்போது நான் பெற்றுக் கொள்கிறேன்....'' எனக் கொடுத்தான்.

திட்டமிட்டபடியே.... குறித்த ஊருக்குச் சென்ற காந்தன் அங்கு செய்ய வேண்டியிருந்த காரியங்கள் எல்லாவற்றையும் செய்துவிட்டு இரண்டு தினங்களின் பின்னர் ஊர் திரும்பினான். நேரே ஊர்ப் பண்ணையாரிடம் தான் சென்றான். தனது சொத்துக்கள் உள்ள பெட்டியைத் திருப்பித் தருமாறு கேட்டான்.

பண்ணையாருக்கோ அதனைத் திருப்பிக் கொடுக்க மனமில்லை. ''அப்படி எதனையும் நீ [illegible]வில்லையே....?'' எனக் கூறிக் கையை விரித்து [illegible]ட்டார். அப்பாவியான காந்தனோ செய்வதறியாது மிகுந்த கவலையுடன் வீடு திரும்பினான்.

தனது பெட்டியை எப்படித் திரும்பப் பெறுவது என யோசித்த காந்தன், அரசனைச் சென்று சந்தித்தான். நடந்த விடயங்களைக் கூறினான்.

காந்தனுக்கு நியாயம் கிடைப்பதற்கு உதவுமாறு கூறி அரசன் அமைச்சர் ஒருவரை நியமித்தார். இது




விடயமாக விபரங்களைக் கேட்டறிந்த அமைச்சர், காந்தனுக்கு யோசனையொன்றைக் கூறினார். அதாவது மறுநாள் சரியாக மாலை நான்கு மணிக்கு அந்தப் பண்ணையாரின் வீட்டிற்கு வருமாறும் அப்போது அங்கு என்ன செய்ய வேண்டும் என்பதையும் அவர் விபரித்தார்.

திட்டமிட்டபடியே மறுநாளும் வந்தது. அமைச்சர் தனது அடையாளம் தெரியாதவகையில் டாம்பீகமாக உடை அணிந்து கொண்டார். கூடவே பெட்டியொன்றையும் எடுத்துக் கொண்டு அந்தப் பண்ணையாரின் வீட்டிற்கு சரியாக நான்கு மணிக்குச் சென்றடைந்தார். சென்றவர், பண்ணையாரைப் பார்த்து ''நான் அவசரமாக ஒரு பயணம் போக வேண்டியுள்ளது. வரும் வரையில் இந்தப் பெட்டியை வைத்துக் கொள்ள முடியுமா?'' எனக் கேட்டார்.

பண்ணையார் பதில் கூறுவதற்கிடையில் அவ்விடத்திற்கு வந்து சேர்ந்த காந்தன், ''ஐயா நான் உங்களிடம் பாதுகாக்குமாறு கொடுத்துச் சென்ற அந்தப் பெட்டியைத் தரமுடியுமா?'' எனக் கேட்டான்.

அதற்கு மறு பேச்சுப் பேசாத பண்ணையார் ஓடிச் சென்று காந்தனின் அந்தப் பெட்டியைக் கொண்டு வந்து கொடுத்தார். கூடவே டாம்பீகமாக உடையணிந்திருந்த அமைச்சரைப் பார்த்து, ''பார்த்தீர்களா? நான் எவ்வளவு நேர்மையுடன், பொறுப்புடன் திருப்பிக் கொடுத்துள்ளேன்.. கவனித்தீர்களா?'' அதேபோல் உங்களுடைய பொருட்களையும் நான் காத்துத் தருகிறேன். தந்து விட்டுச் செல்லுங்கள்'' எனக் கூறினான்.

அமைச்சரும் ''ரொம்ப நன்றி ஐயா''எனக் கூறியவாறு தனது 'பெட்டி'யை பண்ணையாரிடம் ஒப்படைத்து விட்டு அங்கிருந்து புறப்பட்டார்.

அப்பாவிக் காந்தனும் தனது பெட்டி கிடைத்து விட்டதென்ற மகிழ்ச்சியில் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றான். பேராசை மிக்க பண்ணையாரோ அமைச்சர் கொடுத்த பெட்டியை அவசர அவசரமாகத் திறந்தார். திறந்தவருக்கு அதிர்ச்சிதான் காத்திருந்தது. வெறும் கற்களே அதில் காணப்பட்டன.

அப்பாவி ஒருவனுக்கு வஞ்சகம் செய்தமைக்குத் தக்க பாடத்தைக் கற்றுக்கொண்ட பண்ணையார், தன்னைத்தானே நொந்து கொண்டார்.



எம்.அஸ்னாப், தரம் - 4, ஜாயா வித்தியாலயம், மூதூர்.



எம்.நாஸிக் அர்ஹம், தரம் - 7B, களு/மா/மு.ம.வி, களுத்துறை.



சி.தினேஸ்குமார், தரம் - 12A, கவிரவில த.ம.வி, சாமிமலை.



தா.சுபாசினி, தரம் - 10A, கிளி/அ.த.க. பாடசாலை, கிளிநொச்சி.



ஏ.சிறாஜ், தரம் - 7A, ஸாஹிரா தே.பாட, கல்முனை.



சி.ராஜ்குமார், தரம் - 6, இராமநாதபுரம் அ.த.க. பாடசாலை, இராமநாதபுரம்.

## விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகம் விஜய் மாணவர் கழகம்



ரா.ராசமலர், தரம் - 11B, வவு/ஸ்ரீ நாகராஜா வித், வவுனியா.



எஸ்.சாமந்தி, தரம் - 12, கொ/விபுலானந்தா த.ம.வி, கொழும்பு - 8.



ஏ.எல்.ரஸீம், தரம் - 7, தி/ஆலிம் நகர் வித், திருகோணமலை.



ஜெ.ருக்சலா, தரம் - 7C, யா/திருக்குடும்ப கன்னியர் மடம், யாழ்ப்பாணம்.



த.கோகிலன், தரம் 12, ப/பிட்டரத்தமலை த.வி, பதுளை.




வி.டிலக்சன், தரம் - 2, கவிரவில த.ம.வி, சாமிமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ආයුබෝවන් ஆயுபோவன் வணக்கம்

பின்வரும் சொற்களின் உச்சரிப்பை அறிந்து கொள்ளுவோம்





| சொற்கள் | | உச்சரிப்பு | பொருள் |
|---|---|---|---|
| ගුරුතුමා | | ගුරුතුමා | ஆசிரியர் |
| | | குருதுமா | |
| | ගු | Good = ගු | |
| | තු | பத்து = තු | உபாத்தியாயர் |
| නියම | | නියම | குறித்த |
| වෙලාවට | | වෙලාවට | நேரத்திற்கு |
| | | வெலாவ ට | |
| | ට | பட்டம் = ට | |
| | | வெலாவ ට | |
| කියා දෙයි | | කියාදෙයි | சொல்லித் தருவார் |
| | | கியாதெய் | |
| | කි | அக்கி = කි | |
| | දෙ | They = දෙ | |
| | | කියාදෙයි. | |
| හොඳ | | හොඳ | நல்ல |
| | | ஹொ ඳ | சிறந்த |
| | ඳ | The = ඳ | இனிமையான |
| | | හොඳ | |
| කතා | | කතා | கதைகள் |
| | | கதா | |
| | තා | தாத்தா = තා | |
| | | කතා | |
| අපි | | අපි | நாங்கள் |
| | | அபி | |
| | පි | கப்பி = පි | நாம் |
| | | අපි | |

| | | |
|---|---|---|
| ගරු | ගරු | மதிப்பு |
| | கறு | |
| ග | Gum = ග | |
| | ගරු | |

ஆசிரியர் பற்றிய வாக்கியங்கள் சில

1. ගුරුතුමා වෙලාවට පාසල් එයි.
   குருதுமா வெலாவட பாஸல் எய்
   ஆசிரியர் குறித்த நேரத்திற்குப் பாடசாலைக்கு வருவார்
2. ගුරුතුමා අපට පාඩම් කියා දෙයි
   குருதுமா அபட பாடம் கியா தெයි
   ஆசிரியர் எங்களுக்குப் பாடம் சொல்லித் தருவார்
3. ගුරුතුමා අපට සිංදු කියා දෙයි
   குருதுமா அபட சிந்து கியா தெய்
   ஆசிரியர் எமக்குப் பாட்டுச் சொல்லித்தருவார்
4. ගුරුතුමා අපට කතන්දර කියා දෙයි
   குருதுமா அபட கதந்தற கிய தெய்
   ஆசிரியர் எமக்குக் கதைகள் சொல்லித்தருவார்
5. ගුරුතුමා අපට හොඳ සිරිත් විරිත් කියාදෙයි
   குருதுமா அபட ஹொந்த சிரித் விரித் கி தெයි
   ஆசிரியர் எமக்கு நல்ல பழக்க வழக்கங்களைச் சொல்லித்தருவார்
6. ගුරුතුමා අපට ආදරයෙන් කතා කරයි.
   குருதுமா அபட ஆදரயென் கதா கறய்
   ஆசிரியர் எங்களோடு அன்பாகப் பேசுவார்
7. අප ගුරුතුමාට ගරු කරමු
   அபි குருதுமாට கறுகறமு
   நாங்கள் ஆசிரியரைக் கனம் பண்ணுவோம்











### අභ්‍යාසය

கீறிட்ட இடங்களை நிரப்புங்கள்

උදා: ___ රුතුමා
ගුරුතුමා

i. ගු ___ තුමා
ii. ගුරු ___ මා
iii. ගුරුතු ___
iv. අපට ___ ආදරයෙන් කතා කරයි
v. අපි ___ ගරු කරමු




புதன் தோறும் வலம் வரும் விஜய்யே! நீ எப்போ வருவாய் எனவழி மேல் விழி வைத்து உனக்காகக் காத்திருக் கிறேன்.

*ச.சகிலா, மானிப்பாய்*

விஜய்யில் வெளிவரும் இந்து சமுத்திர நாடுகள் பற்றிய தகவல்கள் எங்களுக்கு மிகவும் பிரயோசனமாக இருக்கின்றன. அத்துடன் அந்நாட்டின் தேசப் படம், தலைநகரம் என்பவற்றையும் இணைத்துக் கொண்டால் பாடங்களைக் கற்பதற்கு மிகவும் உதவியாக இருக்கும்.

*அ.லக்ஸ்மன், குருமண்வெளி-11.*

விஜய் பத்திரிகையில்வெளி வரும்அனைத்து விடயங் களும் எனக்கு மிகவும் பிடித்தமாக உள்ளன. எனவே, மாணவர்களாகிய எங்களுக்காக ஆங்கிலம் பயில்வோம் எனும் பகுதியையும் தருமாறு மிகவும் விருப்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

*வை.எல்.ஹபீபா,மீறாவோடை-04*

விஜய்யில் வெளிவரும் சிங்களம் கற்போம் பகுதி மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது. அதேபோன்று ஆங்கிலம் கற்போம் என்ற பகுதியை ஆரம்பித்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். எப்போது ஆரம்பிப்பீர்கள்? பதில் தாருங்கள்.

*எம்.டி.எம்.யமானி,மடிகேமிதியால.*

● விரைவில் தர முயற்சிக்கிறோம்.

(ஆர்)

விஜய்யில் வெளிவரும் அத்தனை அம்சங்களும் என்னைக் கவர்ந்தவை அதிலும் பாழடைந்த பங்களா சூப்பர். 2006 ஜூன் 14 இல் வெளியான மக்களும் நிற பேதமும் அருமை. விஜய் தொடர்ந்தும் வெற்றி நடை போட எனது கோடி வாழ்த்துக்கள்.

*எம்.மனோதீபா, ஹபுகஸ்தலாவ.*

விஜய்யில் வெளிவரும்அனைத்து அம்சங்களும் என்னைக் கவர்ந்தவை. குறிப்பாகக் குறுக்கெழுத்துப் போட்டி, அற்லஸ் வழியே உலகைக் காண்போம், அறிவியற் கலசம், விண்வெளித் தகவல்கள், கதைகள் உங்கள் கடிதம் போன்றவை என்னை மிகவும் கவர்ந்தவை.

*அ.ற.பயாஸ் அகமட், ஏறாவூர்.*

எனக்கு உதவி செய்வதற்கு எத்தனையோ தோழர்கள் உள்ளனர். என்றாலும் எனது கல்வியிலும், எதிர்கால நலனிலும் உதவி செய்வதற்கு ஒரு புதுத்தோழன் கிடைத்துள்ளான். அவன் தான் விஜய் பத்திரிகை. எனவே, அவனைக் காண்பதற்காக ஒவ்வொரு புதன் கிழமையிலும் ஒரு புது மலராய் பூத்துக் கிடக்கிறேன்!

*எம்.மன்சூர், உடதலவின்ன.*

நான் விஜய்யின் தோழன். எந்தன் உள்ளத்தில் எழுச்சியை தூண்டி விட்ட விஜய்யே! நீ இல்லாவிட்டால் எனது திறமைகள் எல்லாம் புதைந்து போயிருக்கும்.

அப்படிப் புதைந்து போகாமல் ஆவலைத் தூண்டிவிட்டு திறமைகளை வெளிக்காட்ட வைத்த விஜய்யே உனக்கு எனது நன்றி.

*ஐ.முஹம்மது இர்ஷாத், உடதலவின்ன-மடிகே.*

எனக்கு நீண்ட நாளாக ஓர் ஆசை. அதாவது, விஜய்யில் வரலாற்றுக் கதைகள் மிகவும் சிறப்பாக உள்ளன. அத்தோடு பழைய கல்லூரிகளின், பாடசாலைகளின் வரலாறு மற்றும் கிராமங்களின் வரலாறு என்று ஓர் அம்சத்தைத் தொடரமாட்டீர்களா? அவ்வாறு தொடர்வீர்களானால் அவை பற்றி எழுதுவதற்கு ஆவலோடு இருக்கின்றோம்.

*என்.கே.எஸ்.ஹுசைன், உடதலவின்ன-மடிகே.*

● தங்கள் ஆலோசனைக்கு நன்றி. அப்படி ஓர் அம்சம் ஆரம்பிப்பது பற்றி ஆலோசித்துச் செயல்படுத்தப்படும்.

(ஆ-ர்)

நான் நாடகமும் அரங்கியலும் கற்கும் மாணவி. எனது பாடத்திற்கு பயன்தரும் வகையில் மலையகத்தின் காமன் கூத்தைப் பற்றி மிக விரிவாக வழங்கியிருந்தீர்கள். இதற்காக விஜய்க்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

*லோ.வினோபா, கனகராயன்குளம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய்

அற்லஸ்



# அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

இங்கு வழங்கப்பட்டுள்ள உலக நடப்புக்கள் தொடர்பான தகவல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விக்கு சரியான விடை அளிப்போரில் மூவருக்குத் தலா ரூ.150/= பெறுமதியான 'அற்லஸ்' பாடசாலை உபகரணங்களை வாங்கக் கூடிய பண வவுச்சர்களைப் பரிசாக சிலோன் பென்சில் நிறுவனம் (அற்லஸ்) வழங்கும்.

# சர்ச்சையைக் கிளப்பியுள்ள திரைப்படம்!

உலக கிறிஸ்தவர்கள் மத்தியில் பெரும் அதிருப்தியைக் கிளப்பியுள்ள 'த டாவின்சி கோர்ட்' என்ற திரைப்படத்தை இந்தியாவில் தடை செய்யுமாறு கோரி இந்திய உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை விசாரித்த நீதிமன்றம் இத்திரைப்படத்திற்குத் தடையுத்தரவைப் பிறப்பிப்பதற்கு மறுத்துள்ளது. இந்திய கிறிஸ்தவ நலன்புரிச் சங்கத்தினாலேயே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

எல்லாம் வல்ல கடவுள் இயேசு கிறிஸ்துவாக மனித உருவெடுத்துப் பிறந்தவரென்று கிறிஸ்தவர்களின் வேதநூலான வேதாகமம் கூறுகின்றது.

'டாவின்சி கோர்ட்' என்ற திரைப்படமானது மேற்படி இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையை சித்தரிப்பதாகக் கூறி, உண்மைக்கு மாறான வகையில் திரைப்படத்தை உருவாக்கியிருப்பதாகக் கூறிக் கிறிஸ்தவர்கள் இதற்குத் தமது எதிர்ப்பைக் காட்டியுள்ளனர்.

குறிப்பாக இயேசுநாதர் திருமணம் செய்வது போல் இத்திரைப்படத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளமையானது மதத்தைக் கொச்சைப்படுத்தும் விதமாக அமைந்துள்ளதாகவும் கிறிஸ்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

இத்தகைய பின்னணியிலேயே இத்திரைப்படத்தைத் தடை செய்யுமாறு மேற்படி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இருப்பினும் இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்தபோது சட்டத்தரணி ஒருவர் இத்திரைப்படமானது கற்பனை கலந்த திரைப்படமாகவே சித்தரிக்கப்படுகின்றது. அது மட்டுமன்றி இதுவோர் உண்மைக்கு மாறான கதை என மறுதாரரே கூறுகின்றபோது, உண்மைக்கு மாறான இத்திரைப்படத்தையிட்டு அலட்டிக் கொள்ளத் தேவையில்லை அல்லவா?" என்று கேள்வி எழுப்பியுள்ளார்.



இதேவேளை, இந்தியாவின் ஆந்திரா, மேகாலயா, நாகலாந்து, பஞ்சாப் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் இத்திரைப்படம் தடை செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. எனினும், ஏனைய மாநிலங்களில் இத்திரைப்படத்தைப் பார்ப்பதற்கு ஏராளமானோர் முட்டி மோதுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இத்திரைப்படம் இலங்கையிலும் தடை செய்யப்பட்டுள்ளது.

'ரொக் ஹொவார்ட்' என்பவரினால் தயாரிக்கப்பட்டிருக்கும் இத்திரைப்படமானது ஏற்கனவே 'டேன் பிரவுன்' என்பவரினால் எழுதப்பட்ட நூலொன்றைத் தழுவியே திரைப்படமாக்கப்பட்டுள்ளது. இத்திரைப்படத்திற்கு எதிர்ப்பு அதிகரித்துள்ள நிலையில் அதுவே ஒரு இலவச விளம்பரமாக மாறிக் குறித்த நூலின் பிரதிகளும் உலக அளவில் கூடிய அளவில் விற்பனையாகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், இத்திரைப்படம் தொடர்பாக கிறிஸ்தவ மக்களின் எதிர்ப்புக்கள் உலக நாடுகள் பலவற்றில் தற்போதும் தொடர்ந்த வண்ணமே உள்ளது.

# ஜனநாயகத்துக்கு எதிரான போராட்டம்.....!

தேர்தல் சட்டங்களை மறுசீரமைக்குமாறு கோரி அரசாங்கத்திற்கு அழுத்தங்களை ஏற்படுத்தும் விதமாக பங்களாதேஷில் எதிர்க்கட்சிகளின் ஆதரவாளர்கள் நாடு பூராகவும் நடத்திய ஆர்ப்பாட்டங்களினால் நகரங்களில் நாளாந்த வேலைகள் அனைத்தும் ஸ்தம்பிதமடைந்தன. தலைநகர் டாக்காவிலும் தொடர்ச்சியாக 36 மணித்தியாலங்களாக வேலை நிறுத்தமொன்றும் நடைபெற்றது. இப்போராட்டங்களில் மொத்தம் 14 எதிர்க்கட்சிகள் பங்கு கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த ஆர்ப்பாட்டக்காரர்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பொலிஸாரும், இராணுவத்தினரும் காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

தமது கோரிக்கையின்படி தேர்தல் சட்டம் திருத்தி அமைக்கப்படாவிட்டால் தொடர்ச்சியான வேலை நிறுத்தங்களில் குதிக்கவுள்ளதாகவும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ள தேர்தலைப் பகிஷ்கரிக்கப் போவதாகவும் 'அவாமி' என்ற எதிர்க்கட்சி எச்சரிக்கை செய்துள்ளது. தற்போதைய தேர்தல்கள் ஆணையாளரையும், இரண்டு உதவித் தேர்தல் ஆணையாளர்களையும் பதவி நீக்கிவிட்டுத் தேர்தல் சட்டங்கள் மறுசீரமைக்கப்படாவிட்டால் ஜனவரியில் தேர்தலை நடத்த விடமாட்டோம் எனவும் 'அவாமி'க் கட்சி மேலும் தெரிவித்துள்ளது. எதிர்வரும் ஒக்டோபர் மாதம் பங்களாதேஷில் தற்போது ஆட்சியில் உள்ள அரசாங்கம் கலைக்கப்பட்டு, இடைக்கால அரசாங்கமொன்று ஏற்படுத்தப்பட்ட பின்னரே ஜனவரியில் அங்கு தேர்தல்கள் நடைபெறவுள்ளன. எனினும், இந்த இடைக்கால அரசாங்கத்தின் மேற்பார்வையின் கீழேயே தேர்தல்கள் நடைபெறவுள்ளமையினால் மேற்படி இடைக்கால அரசாங்கத்தில் சகல கட்சிகளும் இடம் பெறவேண்டும் எனவும் எதிர்க்கட்சிகள் கோரிக்கை முன்வைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# நேபாளத்தில் சந்திப்பு!

நேபாளத்தில் மன்னர் ஆட்சி முடிவுக்கு கொண்டு வரப்பட்டு நாடாளுமன்ற ஆட்சி ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையிலும், அந்நாட்டில் நீண்டகாலமாக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற மாவோ போராளிகளுக்கும் நேபாளப் பிரதமர் கிரிஜா பிரசாத் கொய்ராலாவிற்குமிடையே பேச்சு வார்த்தையொன்று கடந்த 16.06.2006 வெள்ளிக்கிழமையன்று நடைபெற்றுள்ளது.



இச்சந்திப்பின் போது நேபாளப் பிரதமரும் மாவோ போராளிகளின் தலைவரும் நேருக்கு நேர் சந்தித்து உரையாடினர். மன்னர் ஆட்சி முறையை ஒழிக்கும் போராட்டத்தில் பங்குபற்றியவர்கள் என்ற வகையில் மாவோ போராளிகளின் கருத்துக்களுக்கு பிரதமர் கூடிய அக்கறை செலுத்தியிருந்தார்.

நேபாளத்தில் புதிய அரசியலமைப்பு முறையொன்றை ஏற்படுத்த வேண்டும் என்பதும் நாட்டில் இடைக்கால அரசாங்கம் ஒன்றைக் கூட்டாக நிறுவவேண்டும் என்பதுமே மாவோ தலைவரின் பிரதான கோரிக்கையாக இருந்தது. இந்தக் கோரிக்கைக்கு பிரதமர் இணங்கியதையடுத்து இரு தலைவர்களும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க உடன்படிக்கையொன்றில் கையொப்பமிட்டனர்.

84 வயதாகின்ற நேபாளப் பிரதமர் மேற்படி சந்திப்பினையடுத்து மறுநாள் மருத்துவ சிகிச்சைகளுக்காக பெங்கொக் நோக்கிப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

## அற்லஸ் கேள்வி - 54

**கேள்வி: பங்களாதேஷ் அரசாங்கம் எப்போது கலைக்கப்படவுள்ளது.**

சரியான விடை :..........................................

உங்கள் விடையுடன்– பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**அற்லஸ் வழியே**
**உலகைக் காண்போம், கேள்வி - 54,**
**விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

போட்டி இல - 51 இன் சரியான விடை :- இந்தோனேஷியா

**பரிசு பெறுவோர்**

மா.நிதுஷா, தரம் - $9^B$,
புனித அன்னம்மாள் ம.ம.வித், வத்தளை.

இ.பத்மநாதன் தர்சன், தரம் - $8^C$,
யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

ஏ.எல்.எம்.பர்சான், தரம் - $10^D$,
கெகுணகொல்ல தேசிய பாடசாலை, கெகுணகொல்ல.

# 16 தடவைகள் எவரெஸ்டில் சாதனை



நேபாள நாட்டைச் சேர்ந்த அப ஷர்பா என்பவர் 16 ஆவது தடவையாகவும் 'எவரெஸ்ட்' சிகர உச்சியில் கால் பதித்து சாதனை படைத்துள்ளார்.

தனது மனைவியின் கடுமையான எதிர்ப்பின் மத்தியிலேயே தான் இந்தச் சாதனையை நிகழ்த்தியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவர் இவ்வாறு 'எவரெஸ்ட்' சிகரத்தை அடைந்த செய்தியைக் கேட்டு நகரவாசிகள் எல்லோரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்ததோடு, கொண்டாட்டங்களையும் நடத்தினர். இனிமேல் மலை ஏறுவதை நிறுத்திக் கொள்ளப்போவதாக 2003 ஆம் ஆண்டில் இவர் அறிவித்திருந்தார். தான் இவ்வாறு ஓய்வு பெறுகின்றமைக்கு உடல்நிலை காரணமல்ல எனவும், மனைவியின் அதிருப்தியே காரணம் எனவும் அபா ஷர்பா அப்போது அறிவித்திருந்தார். உயிர் ஆபத்துக்களைக் கருதியே மனைவி இது விடயத்தில் அதிருப்தியைக் காட்டியதாகவும், எனினும், இதனை கைவிட மனமில்லாத நிலையிலேயே இம்முறை அவர் மனைவிக்குத் தெரியாமலேயே 'எவரெஸ்ட்' சிகரத்தை அடைந்துள்ளார் எனவும் கூறுகின்றார். 2003 ஆம் ஆண்டுடன் ஓய்வு பெறப்போவதாக அறிவித்திருந்த போதிலும் 2004 ஆம், 2005 ஆம் ஆண்டுகளிலும் தான் 'எவரெஸ்ட்' சிகரத்தை அடைந்ததாகவும், இதன்படி மொத்தமாக 16 தடவைகள் 'எவரெஸ்ட்' சிகரத்தில் ஏறியுள்ளதாகவும் இவர் தெரிவித்துள்ளார்.

'எவரெஸ்டில்' ஏறுவதே சாதனைதான். அதிலும் பதினாறு தடவைகள் 'எவரெஸ்ட்'டில் ஏறுவதென்றால் சாதாரண விடயமா என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆந்தையின் அலறல் சத்தம்



## பாழடைந்த பங்களா

நரசிம்மன்

அத்தியாயம் 9

சைக்கிள் காட்டுபங்களாவை நெருங்கிக் கொண்டிருந்தது. மதனுக்கு உடல் நடுங்குவது போல் இருந்தது. இருந்தாலும் தான் பயப்படுவதை அப்பாவுக்குக் காட்டிக் கொள்ளாமல் இருந்தான். காட்டுபங்களாவை நெருங்குவதற்கு சில யார் தூரமிருக்கும்போது அப்பா சைக்கிளை நிறுத்தினார்.

''மதன், சைக்கிளை இங்கு ரோட்டு ஓரமாக ஒரு மரத்தடியில் நிறுத்திவிட்டுச், சத்தமில்லாமல் காட்டுபங்களாவுக்குப் போவோம்'' என்று கூறியபடி சைக்கிளை விட்டு இறங்க மதனும் இறங்கிக் கொண்டான்.

அதன்படி சைக்கிளை ஒரு மரத்தடியில் நிறுத்தி வைத்துவிட்டுக் காட்டுபங்களாவை நோக்கி நடந்தார் அப்பா. மதன் நடுங்கியபடி அவரைப் பின் தொடர்ந்தான். காட்டுபங்களா ஒரே இருளில் மூழ்கிக் கிடந்தது. எவ்வித சத்தமும் இல்லை. ஒரே நிசப்தமாக இருந்தது. முதல் நாள் மதன் போய் நின்ற இடம் எது என்று கேட்டு அங்கேயே போய் நின்றார் அப்பா. மதனும் அவருடன் போய் நின்று கொண்டான்.

முதல் நாள் போன்றே மதன் கண்ணாடி ஜன்னலுக்குள்ளே விலகியிருந்த திரைச்சீலையூடாக உள்ளே நோட்டமிட்டான். இன்று அங்கு கடுமையான இருள் சூழ்ந்திருந்தது. ''அப்பா, நேற்று நான் இந்த இடத்திலிருந்து தான் உள்ளே பார்த்தேன். அப்போது பிரகாசமான வெளிச்சம் இருந்தது. இன்று வெளிச்சத்தையும் காணவில்லை. நேற்றுப் போல் ஆந்தை அலறும் சத்தத்தையோ, நரி ஊளையிடும் சத்தத்தையோ காணவில்லை'' என்று குரலைத் தாழ்த்திக் கூறினான்.

அப்பொழுது அப்பா சொன்னார். ''மதன் நேற்று நீ தனியாக வந்திருந்தாய். அத்துடன் பயந்து போயும் இருந்தாய் அதனால், உனக்கு ஏற்பட்ட பிரமை என்று தான் நினைக்கிறேன்'' மதனால் எதுவும் கூற முடியவில்லை. தன் கண்களால் கண்டது எப்படிப் பொய்யாகியது என்று சிந்தித்தான். அவனின் அந்த நிலையை அப்பா புரிந்து கொண்டிருக்க வேண்டும். அவர் சொன்னார்.

''மதன் 'கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய். தீர விசாரிப்பதே மெய்' என்று சொல்வதை நீ கேட்டதில்லையா?'' என்று கேட்டார். மதனால் எதுவும் கூறமுடியவில்லை. மௌனமாக நின்றான்.

அப்பா சொன்னார், ''மதன் இனியும் இந்தக் குளிரில் நடுங்கிக் கொண்டு நிற்க வேண்டுமா? கதவை உடைத்துக் கொண்டாவது உள்ளே போயிருப்போமா?'' என்று கேட்டார். ''ஐயோ! அப்பா வேண்டாம். அதனால் வேறு பிரச்சினைகள் வந்து விடப்போகிறது''

''அப்படியானால் இப்பொழுது என்னதான் செய்வது மதன்?''

''வந்து.... அப்பா நாம் பேசாமல் வீட்டுக்குப் போவோம்'' என்றான் மதன்.

''அப்படியானால் நான் எடுத்த முயற்சி பிரயோசனம் இல்லாமல் போய்விடுமே மதன்?''

''அதற்கு என்னப்பா செய்ய பேயைத்தான் இன்று காணவில்லையே?''

''அப்படியானால், வீட்டுக்குப் போகலாம் என்கிறாயா?''

''ஆமாம். அப்பா அதுதான் நல்லது'' என்று கூறி மதன் அப்பாவின் கையைப் பிடித்து இழுத்தான். அப்பாவும் வேறு வழியில்லாமல் மதனுடன் சேர்ந்து வீட்டுக்குப் போக ஆயத்தமானார். நான்கைந்து அடி தூரம் அவர்கள் சென்றிருப்பார்கள்.

அப்போது.....? ஆந்தையொன்று பயங்கரமாக அலறும் சத்தம் கேட்டது. மதன் நடுங்கிக் கொண்டு அப்பாவின் கையை இறுகப் பற்றிக் கொண்டான்.

''அப்பா ஆந்தை அலறும் சத்தம் கேட்கிறதா?



இப்படித்தான் அப்பா நேற்றும் கேட்டது''

''இதில் ஆச்சரியப்படுவதற்கோ, பயப்படுவதற்கோ என்ன இருக்கிறது மதன்? இரவு நேரத்தில் ஆந்தை அலறுவது சகஜம் தானே. அதிலும் இது காட்டுப் பிரதேசம் அல்லவா?''

அப்பா இப்படிப் பேசிக் கொண்டிருக்கும்போது நரியொன்று ஊளையிடும் சத்தம் கேட்டது.

''அப்பா கேட்கிறதுதானே. நரி ஊளையிடுகிறது. நேற்றும் இப்படித்தான்'' என்று மதன் கூற

அப்பா சிரித்து விட்டுச் சொன்னார்.

''மதன் நான் ஆந்தை அலறியதற்குக் கூறினேனே காரணம் அதே காரணம் தான் இதற்கும்''

''அது சரி அப்பா.... இந்தச் சத்தங்கள் எல்லாம் பங்களாவுக்கு உள்ளேயிருந்து வருகின்றன. புரிகிறதா உங்களுக்கு?''

''அப்படித்தான் தெரிகிறது. ஆனால், பங்களாவுக்குப் பின்புறம் அடர்ந்த காடு அல்லவா? அந்தக் காட்டில் ஏற்படும் சத்தங்கள் பங்களாவுக்கு உள்ளிருந்து வருவதுபோல் இருக்கலாம் அல்லவா? இருந்தாலும் பரவாயில்லை. வா, இன்னொரு முறை பங்களாவுக்கு உள்ளே பார்த்து விட்டு வருவோம்'' என்று அப்பா சொன்னதும் மதன் சொன்னான்.

''வேண்டாமப்பா.... எனக்குப் பயமாக....'' என்று கூறும்போதே அப்பா சொன்னார்,

''இந்தப் பயம்தான் இருக்கக்கூடாது என்று கூறினேன். அந்தப் பயத்தைப் போக்குவதற்காகத்தான் உன்னை இவ்வளவு கஷ்டப்பட்டுக் கூட்டிக் கொண்டு வந்தேன்'' என்று கூறி மதனை அழைத்துக் கொண்டு மீண்டும் காட்டுபங்களாவை நோக்கி நடந்தார்.

காட்டுபங்களா ஓரமாகப் போய் நின்றதும் மதன் விலகியிருந்த திரைச்சீலையூடாக மீண்டும் உள்ளே நோட்டமிட்டான். உள்ளே நோட்டமிட்டவன் சடாரெனப் பின்னால் திரும்பி ''அப்பா.... இப்போ உள்ளே பாருங்கள். வெளிச்சம் வெளிச்சம்....'' என்று மெதுவாகக் கூறினான்.

''அப்படியா'' என்றபடி அப்பாவும் உள்ளே நோட்டமிட்டார். மதன் மீண்டும் உள்ளே நோட்டமிட்டான். அப்போது.....? யாரோ ஒரு மனிதன் மரணபயத்தில் ஓடி வருவது தெரிந்தது.

''அப்பா..... உள்ளே பாருங்கள். இன்றும் ஒரு மனிதன் ஓடி வருகிறான். அவனையும் பேய் துரத்து கிறது போலிருக்கிறது'' என்று கூறினான்.

''அப்படியா?'' என்றபடி அப்பா உள்ளே நோட்டமிட்டார். மதன் கூறியபடியே ஒரு மனிதன் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மரணபயத்தில் ஓடி வருவது தெரிந்தது. அப்படியானால் மதன் கூறியது போல் பேய்தான் அவனைத் துரத்துகிறதா? அப்பா இப்படிச் சிந்தித்து இருக்கவேண்டும். அவர் இந்தக் காட்சியை கூர்ந்து பார்த்துக் கொண்டு இருந்தார்.

அந்த மனிதன் உயிருக்காகப் போராடிக் கொண்டு தலைதெறிக்க ஓடிவந்து கொண்டிருந்தான்.

(தொடரும்....)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொருந்தாத நட்பு 3

கதை - நரசிம்மன் | ஓவியம் - எஸ்.டி.சாமி | கிரபிக்ஸ் - அனுர்ஜன்




# ரோபோக்கள் கால்ப்பந்து



வடக்கு ஜெர்மனியின் பிரிமெனில் நடைபெற்ற கால்ப்பந்து விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றுவதற்காக நான்கு கால் சிகப்பு ரோபோக்கள் வரிசையில் தயார் நிலையில் இருப்பதையும் 'ஜல்டி' என அழைக்கப்படும் இரண்டு கால் ரோபோ கால்ப்பந்து விளையாடுவதையுமே படங்களில் காண்கிறீர்கள்.

36 நாடுகளிலிருந்து வருகை தந்திருந்த 440 குழுக்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான ரோபோக்கள் இந்த ரோபோ உலகக் கிண்ண "ரொபோக்கொப்" கால்ப்பந்து விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றின. இந்நிகழ்வுக்கு சுமார் இருபதாயிரம் ரசிகர்கள் வருகை தருவர் என்று எதிர்பார்க்கப்பட்டது.



# வெப்பத்தைத் தணிக்கக் குளியல்



யானைக்குட்டியொன்று கடும் வெப்பத்தைத் தணித்துக் கொள்ளும் வகையில் தடாகத்தில் மகிழ்ச்சி பொங்க நீந்தி விளையாடுவதையே படத்தில் காண்கிறீர்கள். 'பெர்லின்' மிருகக்காட்சிச்சாலையிலேயே இந்தக் காட்சி.ஜேர்மனியில் கடும் வெப்பம் நிலவுகிறது. அடுத்த சில நாட்களில் இங்கு சீதோஷ்ண நிலை மாற்ற மடையும் என்று வானிலை அவதானிகள் தெரிவித்துள்ளனர்.



**ஆசிரியர்:** முதன் முதல்ல, மின்சாரத்தைக் கண்டு பிடித்தபோது, என்ன நடந்தது தெரியுமா?

**மாணவன்:** யாரோ ஒருவருக்கு பயங்கரமா 'ஷொக்' அடிச்சிருக்கும் சேர்.

வெளிவந்துவிட்டது.!!!
ஜூன் மாத இதழ்
தமிழ் PCTIMES
தகவல் தொழில்நுட்ப சஞ்சிகை
இலங்கையின் ஒரேயொரு மாதாந்த தகவல் தொழில் நுட்ப சஞ்சிகை
2006 மார்ச் முதல்
மாதாந்தம் வெளிவருகிறது.



இலங்கையின் சகல பாகங்களிலும் கிடைக்கும்!
விஜய் பதிப்பகத்தாரின் மற்றுமோர் வெளியீடு
wijeyanewspapers

Digitized by Noolaham Foundation

ஸ்போர்ட்ஸ்

# கால்ப்பந்தாட்டத்தில் சிறப்பு வீரர்கள்!

உலகக் கிண்ணக் கால்ப்பந்தாட்டப் போட்டிகள் தற்போது ஜேர்மனியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஏராளமான நாடுகள் இப்போட்டிகளில் கலந்து கொள்கின்ற போதிலும் ஒரு சில வீரர்களின் மீது ரசிகர்களின் கவனம் அதிகப்படியாக இருந்து வருகின்றது. இவ்வாறு ரசிகர்களின் அதிக கவனத்தை ஈர்த்துள்ள சில அணிகளின் வீரர்களைப் பற்றிய விபரங்களைப் பார்ப்போம்.

## றொனால்டினோ - பிரேஸில்



உலகிலேயே சிறந்த கால்ப்பந்தாட்ட வீரராக கருதப்படுபவர் பிரேஸில் நாட்டு வீரரான றொனால்டினோ ஆவார். சர்வதேச மட்டத்தில் 62 போட்டிகளில் கலந்து கொண்டுள்ள இவர் 27 கோல்களை இதுவரை பெற்றுள்ளார். வியூகம் வகுத்துப் பந்தினை லாவகமாக, தந்திரோபாயமாக முன் நகர்த்திச் செல்வதில் கூடிய கவனத்தை செலுத்தும் ஒரு வீரர் இவர். இவர் உதைத்து மேல் நோக்கி எகிறுகின்ற பந்தானது மேலெழுந்த கையோடு திசைமாறி வெவ்வேறு பக்கங்களுக்குத் திரும்பும் விதமானது எதிரணி வீரர்களையே திக்குமுக்காடச் செய்து விடுகின்றது.

2004-2005 ஆம் வருடத்திற்கான சிறந்த வீரராகவும் றொனால்டினோ தெரிவு செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமன்றி ஐரோப்பிய லீக் கிண்ணப் போட்டிகளில் பாசிலோனா அணியின் சார்பாக விளையாடி வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொடுத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஷன்சுக்கே தக்கமுரா - ஜப்பான்



ஆசிய மட்டத்தில் கலந்து கொள்கின்ற வீரர்களுள் சிறந்தவோர் வீரராக ஜப்பானைச் சேர்ந்த ஷன்சுக்கே தக்கமுரா (ஜப்பான்) கருதப்படுகின்றார். றொனால்டினோவைப் போலவே இவரும் எகிறும் பந்தினைத் திசைமாறும் விதமாகச் சுழற்றக் கூடியவர். 1998 ஆம் ஆண்டில் முதன்முறையாக ஜப்பான் சார்பாக இவர் போட்டியிட்டார். 2002 ஆம் ஆண்டில் இத்தாலியின் றெஜினா அணியில் சிலகாலங்கள் இவர் விளையாடியபோதிலும் அக்காலகட்டத்தில் இவரது ஆட்டத்திறமை பின் தங்கிக் காணப்பட்டது. இதனையடுத்து ஸ்கொட்லாந்தின் 'செல்டிக்' என்ற அணியில் தக்கமுரா இணைந்தார். இதன் பின்னர் இவரது ஆட்டத்திறன் சிறப்பாக மிளிர்ந்து காணப்பட்டது. இதனால், விரைவாகவே பிரபல்யமடைந்தார். இதனையடுத்தே ஜப்பான் அணிக்கு விளையாட வருமாறு இவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

## மைக்கல் பெலக் - ஜேர்மனி



2002 ஆம் ஆண்டில் உலகக் கிண்ணப் போட்டிகளின்போது ஜேர்மனி அணியினை இறுதிப் போட்டிகள் வரையில் முன்னேறச் செய்ததில் முக்கிய பங்காற்றியவர் மைக்கல் பெலக் ஆவார். எனினும், அரையிறுதிப் போட்டியில் இவருக்கு சிவப்பு அட்டை காட்டப்பட்டதன் காரணமாகத் துரதிர்ஷ்டவசமாக இறுதிப் போட்டியில் கலந்துகொள்ளும் வாய்ப்பினை இவர் இழந்தார். 30 வயதாகின்ற மைக்கல் பெலக் கால்ப்பந்தாட்ட உலகிற்குக் கிடைத்துள்ள அபூர்வமான வீரர் என வர்ணிக்கப்படுகின்றார். ஒரே விதமாக என்றில்லாமல் நேரத்திற்கு தக்கபடி பல்வேறு வடிவில் பந்தினை நகர்த்திச் செல்வதில் அசகாய சூரர் எனவும் இவர் வர்ணிக்கப்படுகின்றார்.

## பாவெல் நட்வெல் - செக்குடியரசு



உலக கால்ப்பந்தாட்ட அணிகளின் தரவரிசையின் படி இரண்டாம் இடத்தில் உள்ளது. செக்குடியரசு அணி. இந்தச் செக்குடியரசு அணியில் வயதில் கூடிய வீரராகக் கருதப்படுபவர்தான் பாவெல் நட்வெல். இவருக்கு வயது 34. அணியிலிருந்து ஏற்கனவே ஓய்வு பெற்றிருந்த இவரை இவரது திறமையைக் கருத்தில் கொண்டே அணிக்கு மீண்டும் அழைத்துள்ளனர் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

1992 ஆம் ஆண்டிலிருந்து இவர் போட்டிகளில் கலந்து கொள்கின்றார். 1996 ஆம் ஆண்டில் இத்தாலி அணியின் சார்பாக விளையாடியிருந்த இவர் பிரபல்யம் பெற்றிருந்தார்.

இதனையடுத்து 2001 இல் 'ஜுவான்டாஸ்' என்ற அணியில் விளையாடினார். தொடர்ந்து 2002 ஆம் ஆண்டில் சிறந்த ஐரோப்பிய வீரர் என்ற விருது இவருக்கு வழங்கப்பட்டது.

2004 ஆம் ஆண்டில் உடல் உபாதையின் காரணமாகப் போட்டிகளில் கலந்து கொள்ளாமல் ஓய்வு பெற்றிருந்தார். இருந்தபோதிலும் இம்முறை உலகக் கிண்ணத்தின் அவசியம் கருதியும், இவரது திறமையை கவனத்தில் கொண்டுமே இவர் மீண்டும் இம்முறை உலகக் கிண்ணப் போட்டிகளில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

## தியரி அன்ட்றிய் - பிரான்ஸ்



1998 இல் பிரான்ஸ் அணி உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்கையில் தியரி அன்ட்றிய் என்ற இந்த இளைஞருக்கு வயது 22. எனினும் சர்வதேச அனுபவம் இல்லாத நிலையிலும் இறுதிப் போட்டியின்போது இவர் 3 கோல்களைப் பெற்றமை குறிப்பிடக்கூடிய விடயமாகவே அமைந்தது

இருப்பினும், 2002 இல் வாய்ப்புக்களை இழந்திருந்த போதிலும் இந்த வருடம் 2006 ஆம் ஆண்டிற்கான போட்டியின்போது பிரான்ஸுக்கு இன்றியமையாத ஒரு வீரராகவே களம் இறங்கியுள்ளார். இம்முறை உலகக் கிண்ணப் போட்டிகளுக்கான தகுதிகாண் போட்டியின் போது அயர்லாந்துடனான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் பிரான்ஸை வெற்றியீட்டச் செய்த பெருமை இவரையே சாரும். இதுவரை பிரான்ஸ் சார்பாக 77 போட்டிகளில் கலந்து கொண்டு 32 கோல்களை இவர் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. ஒரு வகையில் பிரான்ஸ் அணியின் வெற்றியை தீர்மானிப்பவராகவும் இவர் வர்ணிக்கப்படுகின்றார்.

## லயன்ஸ் மெஸீ - ஆர்ஜன்டீனா



அர்ஜன்டீனாவின் மற்றுமோர் மெரடோனாவாக வர்ணிக்கப்படுபவர் இவர். வயது 18.

2005 ஆம் ஆண்டில் 20 வயதிற்குக் கீழானோருக்கான உலகக் கிண்ணத்தை அர்ஜன்டீனா வெற்றி கொள்வதற்குப் பங்களிப்பைச் செலுத்தியவர். இப்போட்டியின் போது அதிக கோல்களைப் பெற்றவர் என்ற பாராட்டையும் பெற்றிருந்தார். முதல் தடவையாகவே இவர் இம்முறை உலகக் கிண்ணப் போட்டிகளில் கலந்து கொள்கின்றார். அநேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் உலகக் கிண்ணப் போட்டிகளில் சிறந்த இளம் வீரர் என்ற விருதினை இவர் பெறக்கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

பந்தில் பார்வையை நுணுக்கமாக வைத்து எதிர் அணியினரின் பார்வையில் சிக்காமல் விரைவாகப் பந்தினை நகர்த்திச் செல்வதில் இந்த இளம் வீரர் கைதேர்ந்தவர்.

## தங்கம் வென்ற இலங்கை வீராங்கனை!

வியட்னாம் ஹெனோயி நகரில் நடைபெற்ற மகளிர் பிரிவு ஆசிய பகிரங்கக் குத்துச் சண்டைப் போட்டியில் இலங்கை சார்பாகக் கலந்து கொண்ட அனுஷா கொடிதுவக்கு தங்கப் பதக்கமொன்றை பெற்றுள்ளார். மேலும், நில்மினி ஜயசிங்ஹ, சந்திரிகா குருகே, எம்.சுசந்தி ஆகிய மூவரும் தலா ஒரு வெண்கலப் பதக்கங்களையும் பெற்றுள்ளனர்.

பதினொரு நாடுகள் கலந்து கொண்ட இப்போட்டியில் இலங்கையின் சார்பாக ஐந்து பேர் கலந்து கொண்டிருந்தனர்; இதில் நான்கு பேர் பதக்கங்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

தங்கப் பதக்கத்தை வென்ற அனுஷா இந்தியாவைச் சேர்ந்த வீராங்கனை ஒருவரையே தோற்கடித்திருந்தார். கடும் போட்டியின் பின்னர் ஒரே ஒரு புள்ளி வித்தியாசத்திலேயே இலங்கை வீராங் கனை இந்த வெற்றியைப் பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்க் ட்வெய்னின் சோம்பேறித்தனம்

மார்க் ட்வெய்ன் அப்பொழுது ஓர் இளைஞன். வேலை தேடி அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தார். இறுதியாகச் சான் பிரான்சிஸ்கோவில் 'கால்' என்னும் பத்திரிகை அலுவலகத்தில் அவருக்கு ஒரு வேலை கிடைத்தது. அரிதாகக் கிடைத்த வேலையல்லவா? மார்க் ட்வெய்ன் நன்றாகத்தான் வேலை செய்து வந்தார். அங்கு வந்து ஆறு மாதங்களும் ஆகிவிட்டன.



ஒருநாள் அவர் தம் அறையில் அமர்ந்து பணி புரிந்து கொண்டிருக்கும் போது ஊழியர் ஒருவர் வந்து ஆசிரியர் அழைப்பதாகக் கூறிச் சென்றார்.

'எதற்காக அழைத்திருப்பார்?' என்று எண்ணியவாறே எழுந்து சென்று ஆசிரியர் அறைக்குள் நுழைந்தார் மார்க் ட்வெய்ன்.

"உம்மை வேலையிலிருந்து நீக்கியிருக்கிறோம். நீர் வீட்டிற்குச் செல்லலாம்" என்றார் ஆசிரியர். அவரைப் பார்த்ததும் மார்க் ட்வெய்ன் இப்படியொரு செய்தி தமக்குக் காத்துக் கொண்டிருக்குமென்று எதிர்பார்க்கவே இல்லை. அதிர்ந்து போய்விட்டார் அவர். 'முகத்தில் அடித்தாற்போல் அல்லவா கூறிவிட்டார்' என்று எண்ணியதும் அவருக்கு ஆத்திரம் பொங்கியது.

"ஏன் நிற்கிறீர்? போகலாம்" என்றார் ஆசிரியர்

"என்னை ஏன் விலக்குகிறீர்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன். உண்மையான காரணமிருந்தால் கூறுங்கள்" என்று கேட்டார் மார்க் ட்வெய்ன்.

"உண்மையான காரணமா? நீர் ஒரு சோம்பேறி. ஒன்றிற்கும் உதவாதவர். இதைத் தவிர்த்து வேறு காரணம் வேண்டுமா?"

"அப்படியா! என்னவோ கெட்டிக்காரர் நீங்கள் தான் என்று எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். என்னைக் காட்டிலும் நிரம்ப மோசமானவர் நீங்கள் தான் என்பேன் நான். ஏன் தெரியுமா? நான் ஒரு சோம்பேறி; ஒன்றிற்கும் உதவாதவன் என்பதைத் தெரிந்து கொள்ள உங்களுக்கு ஆறுமாதங்கள் பிடித்தன. ஆனால், எனக்கு ஒருநாள் பிடித்தது. வேலைக்கு வந்த அன்றே நான் தெரிந்து கொண்டு விட்டேன்" என்று மார்க் ட்வெய்ன் கூறிவிட்டு விருட்டென்று வெளியே சென்றுவிட்டார்.

தொகுப்பு :- மர்ஸியா நாபிர்,
11/02A,பாகிர் மாகார்அவனியூ,
மருதானை, பேருவளை.



மடுள்போவை, ஹெம் மாத்தகமையைச் சேர்ந்த மொஹம்மட் முஸ்னி என்ற தம்பிப் பாப்பாவுக்கு ஜூலை 02 ஆம் திகதியன்று முதலாவது பிறந்தநாள். மொஹம்மட் ஸல்மான், சித்தி அனீசா ...யோரின் புதல்வரான இவரை சகோதரன் மும்தாஸ், சகோதரி முனீரா மற்றும் குடும்பத்தில் அனைவரும் பல்கலையும் பெற்று நல்வாழ்வு வாழ அன்புடன் வாழ்த்துகின்றனர்.



பேருவளை பூந்தோட்டத்தில் அண்மையில் நடைபெற்ற கல்வி வழி காட்டல் நிகழ்ச்சியின் போது சிறந்த மாணவனாகத் தெரிவான ஸப்ராஸ் ஸலாப்தீனுக்கு அமைப்பாளர் எம்.இஸட். எம்.ஹஸன் பரிசு வழங்குவதைப் படத்தில் காண்கிறீர்கள்.

விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு

## அகதிச் சிறுவர்



வானமெங்கும் வெள்ளிப் பூக்கள்
அள்ளிச் சூட ஆளில்லை
பூமியெங்கும் அகதிச்சிறுவர்
அள்ளி அணைக்க ஆளில்லை

வெளியில் எங்கும் கிளிகள் பாடும்
கேட்டுச் சுவைக்க ஆளில்லை
வழியில் தெருவில் மழலைப் பேச்சு
கேட்டு மகிழ ஆளில்லை

கடலில் துள்ளும் மீன்கள் கூட்டம்
கண்டு களிக்க ஆளில்லை
படகில் அலையும் அகதிச் சிறுவர்
கரையும் சேர வழியில்லை.

ஆக்கம் : க.அஸ்வினி,
தரம் - $7^{C}$,
சைவ மங்கையர் வித்,
கொழும்பு - 6

## கைவண்ணங்கள்




கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



ஏ.ஆர்.எம்.நிஸ்லா,
தரம் - 4,
மா/அல்மினா ம.வி,
மீயல்லை.




எம்.ஏ.அர்சத் ஆரி,
தரம் - $7^{B}$,
கமு/சாஹிராதே.பாட,
சாய்ந்தமருது II




கே.தினேஸ் பியங்க,
தரம் - 5,
றோமன் த.க.வித்,
நரக்கள்ளி.



ஏ.ஏ.எம்.சஸீன், தரம் - $6^{D}$,
டி.எஸ்.சேனாநாயக்க
கல்லூரி,
கொழும்பு - 7



எம்.ஹரிணிகீர்த்தனா,
தரம் - $7^{T}$,
பெண்கள் உயர்தரப்
பாடசாலை, கண்டி.



எம்.எப்.எப்.ஹஸ்பா,
தரம் - $3^{T}$,
கா/ஹாலிவெல
மு.க.வி,
காலி.



ஜே.எப்.மின்ஹா,
தரம் - $7^{E}$,
நஸ்ரியா ம.க, சிலாபம்.



பி.என்.எம்.நஸ்மி,
தரம் - $6^{D}$,
அல்-ஹிதாயா மு.ம.வி,
கொழும்பு - 10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி. இல.69

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | ■ | 3 |
| | ■ | லா | ■ | ■ | னா |
| 4 மோ | 5 | | ■ | 6 | |
| ■ | | ■ | 7 | ட் | |
| 8 | | ல | | | ■ |
| 9 | தி | ■ | | ■ | 10 |

### மேலிருந்து கீழ் 5

01. சைக்கிளில் உள்ள மின் குமிழுக்கு மின் சக்தியை வழங்குவது.
02. ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமைச் சந்திக்கும் போது கூற வேண்டியது.
03. பனம்பழத்தின் சாற்றிலிருந்து தயாரிக்கப் படும் உணவு வகை (குழம்பி)
05. வழித்தோன்றல் - ஒத்தசொல்.
06. ஆழமற்ற குளம்.
07. இலங்கையில் புடைவைத் தொழிற்சாலை அமைந்துள்ள இடமொன்று.
08. பெண் மாடு.

### இடமிருந்து வலம்

01. முற்காலத்தில் பூமியில் வாழ்ந்ததாகக் கருதப்படும் இராட்சத விலங்கினம்.
04. கூடாதது, கெட்டது என்றும் பொருள்படும்.
06. 'பிரி' என்றும் பொருள்படும். (மாறி)
07. கதவுகளைத் திறக்க முடியாமல் பொருத்தப்பட்டிருக்கும் சாதனம்.
08. இலங்கையில் நெல் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடங்களிலொன்று.
09. சுருதி எனவும் கூறலாம்.
10. பொருட்களைப் போட்டு எடுத்துச் செல்லப்பயன்படுவது.

**குறுக்கெழுத்துப் போட்டி 69**
**"விஜய்"**
**த.பெ.எண். 2037 கொழும்பு**

**பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகள்**

சு.வினோஜன், தரம் - 12(கலை),
இந்துக் கல்லூரி, மட்டக்களப்பு.

சுறைஸ் அஹமட், தரம் - 11,
முஸ்லிம் ம.கல்., அக்கரைப்பற்று-06.

எஃப்.சிஹானா, தரம் - 10B,
நூராணியா மு.ம.வித்., மாவனல்லை.

## போட்டி. இல - 66இன் விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 கி | ளி | 2 யோ | பெ | ட் | டா |
| ளி | | கா | | | |
| 3 மு | ச் | ச | டை | ப் | 4 பு |
| க் | | ன | | | ள் |
| 5 கு | 6 ரு | ம் | பை | | ள |
| | த | | | 7 தொ | டி |

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 55 - பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி : 01**
ர.சிவானியா, தரம் - 5A,
கதிரேசன் க.வித்., நாவலப்பிட்டி.

**போட்டி : 02**
பா.றிஸ்வானா, தரம் - 8, கொடே
கொடை மு.வித்., ஹெம்மாதகம.

**போட்டி : 03**
நுபைல் அஹமட், தரம் - 4,
அலுபொத்தை மு.ம.வி, அலுபொத்தை.

**போட்டி : 04**
பி.டிலக்ஷன், தரம் - 7B,
தமிழ் மத்திய கல்., ஹப்புத்தளை.

**போட்டி : 05 (குறு.போ-66)**
ஆரா தில்பர், தரம் - 9C,
அல் மனார் ம.கல்., மருதமுனை.

## சரியான விடையின் கீழ்க் கோடிடுக 1

1. கூடு கட்டி வாழாத பறவை
   (a) புறா (b) குயில் (c) மைனா
2. ஜப்பான் நாட்டின் பழைய பெயர்
   (a) சைப்ரஸ் (b) வெப்பன் (c) நிப்பொன்
3. உலகின் மிகப்பெரிய துறைமுகம் அமைந்துள்ள இடம்
   (a) திருகோணமலை (b) நியூயோர்க் (c) டோக்கியோ
4. நமது வெளிச்சுவாசத்தின் போது வெளியேற்றப்படும் வாயு.
   (a) காபனீரொட்சைட் (b) ஐதரசன் (c) ஒட்சிசன்

### பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக
**(Centipede, Grasshopper, Whale, Snail, Turtle, Tortoise)**

(அ) நத்தை = ..............................

(ஆ) ஆமை = ..............................

(இ) பூரான் = ..............................

(ஈ) திமிங்கிலம் = ..............................

## 2 இணைக்க

1. சாரணியம்
2. எய்ட்ஸ்
3. ஒலிம்பிக்
4. சார்க்
5. ஐ.நா சிறுவர் பாதுகாப்பு நிதியம்




## சரியான விடை தருக 3

a) சதுரத்திற்கு மட்டும் உட்பட்ட இலக்கங்கள் எவை?
..............................

b) சதுரம், வட்டம், முக்கோணம் ஆகிய மூன்றுக்கும் பொதுவான இலக்கம் எது?
..............................

c) வட்டத்திற்கு உட்பட்ட ஆனால், சதுரத்திற்கும் முக்கோணத்திற்கும் உட்படாத இலக்கங்கள் எவை?
..............................




(1) சதுரத்திற்கும், முக்கோணத்திற்கும் மட்டுமே உட்பட்ட எழுத்துக்கள் எவை?
..............................

(2) முக்கோணத்திற்கு உட்பட்ட ஆனால், வட்டத்திற்குட்படாத எழுத்துக்கள் எவை?
..............................

(3) வட்டத்திற்குட்பட்ட எழுத்துக்கள் எவை?
..............................







**1, 2, 3, 4 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் உறையிலும் 5ஆம் இலக்க குறுக்கெழுத்துப் போட்டிக்கான விடையை தபால் அட்டையில் ஒட்டி 2006.07.05ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.**

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 58**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## அறிவுக்கு விருந்து விடைகள் - 55

**போட்டி - 01**
1. கலப்பை
2. அறுவடைக் கத்தி
3. மண்வெட்டி
4. கோடாரி
5. சீவுளி
6. கத்தி

**போட்டி - 02**
a) செய்யாதே
b) குடிப்பது
c) இருப்பதையும் இழப்பான்
d) குடியைக் கெடுக்கும்
e) காற்றுள்ள போதே

**போட்டி - 04**
4. 58337

**குறிப்பு :-**
மாணவர்களே! நீங்கள் போட்டிகளுக்கான விடைகளை எழுதி அனுப்பும் போது உங்கள் பெயர், வீட்டு முகவரி, பாடசாலையின் பெயர், பாடசாலை முகவரி, தரம், நீங்கள் வசிக்கும் நகரம், மாவட்டம் என்பவற்றைத் தெளிவாக எழுதி அனுப்புங்கள். மேற்குறிப்பிட்ட தகவல்களை எழுதாதவர்கள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

## படத்தில் எத்தனை முகங்களுள்ளன? 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றிலிருந்து..

## சீதாவாக்கை போர்

அத்தியாயம் 47

**1** தர்மபால மன்னனின் பாதுகாப்பிற்காக கோவாவிலுள்ள ராஜப்பிரதிநிதி பெரும் படையொன்றை கோட்டே இராச்சியத்திற்கு அனுப்ப முடிவு செய்தான். அது மட்டுமன்றி சீதாவாக்கை மன்னனால் கைப்பற்றப்பட்ட நிலங்களைத் திரும்பவும் கோட்டே இராச்சியத்திற்குப் பெற்றுக் கொடுக்கவும் தீர்மானித்தான். அதன் பின் மாயாதுன்னை மன்னனுடன் போரிட வேண்டுமென்பதற்காக இவ்விதம் செயற்பட முடிவு செய்தான். இத்தருணத்தில் ராஜப்பிரதிநிதி செல்வத்தின் மீது கொண்ட பேராசை மீண்டும் வெளிக்கிளம்பியது.

**2** இந்நிலையில் புவனேகபாகு மன்னனின் செல்வங்களை வீதிய பண்டார சேனாதிபதி ஒளித்து வைத்து விட்டானோ என்ற சந்தேகம் ராஜப்பிரதிநிதிக்கு ஏற்பட்டது. திடீரென வீதிய பண்டார மற்றும் தம்மடரால இருவரின் வீடுகளையும் தேடிப் பார்க்க ஒற்றர்களை அனுப்பி வைத்தான். ஒற்றர்கள் அவர்களிடம் விசாரணை நடாத்தினர். எதுவும் தமக்குத் தெரியாது எனக் கூறவே தர்மபால மன்னனிடமும் மன்னனின் வயது சென்ற இராணியிடமும் விசாரித்துப் பார்த்தனர்.

**3** அரசனின் செல்வங்களைப் பற்றி எதுவும் தமக்குத் தெரியாது எனவும், அவற்றை ராஜ சேவையாளர்களே தெரிந்து வைத்திருப்பார்கள் எனக் கூறினர். இதையடுத்து ராஜ சேவையாளர்களுக்குப் பல கஷ்டங்களை ஏற்படுத்தினர். செல்வங்களை ஒளித்து வைத்திருக்கும் இடத்தைக் கூறும்படி கேட்டுத் தொல்லை செய்தனர். எந்தப் பலனும் ஏற்படாத நிலையில் வீதிய பண்டார சேனாதிபதியிடம் சென்று திரும்பவும் விசாரணை நடத்தினர். அவனும் அரசனின் செல்வங்கள் பற்றிய விபரம் எதுவும் தனக்குத் தெரியாது எனக் கூறினான்.

எழுதுபவர் : திலகன்
சித்திரம் : அபயன்

**4** இதன் பின்பும் ராஜப்பிரதிநிதி திருப்தியடையவில்லை. அமைதியாக இருந்தான். வீதிய பண்டார முன்பு வழங்கிய வாக்குறுதியை, மாயாதுன்னை மன்னன் பலாத்காரமாகக் கைப்பற்றிய கிராம நிலங்களைப் பெற்றுத்தருமாறு கேட்டுக் கொண்டான். அத்துடன் சிதாவாக்கை இராச்சியத்தை அழிப்பதற்கு உதவி செய்வது போர்த்துக்கேயரின் கடமை என எடுத்துக் கூறினான்.

**5** தனக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றினால் தானும் தன் குடும்பமும் கிறிஸ்தவ சமயத்தை தழுவுவதாகவும் குறிப்பிட்டான். அது மட்டுமன்றி கொழும்பில் கோட்டையொன்றைக் கட்டுவதற்கும் இடம் தருவதாகவும் கூறினான். அது மட்டுமன்றி 20,0000 பர்தாஔஸ் தருவதற்கும் சம்மதித்தான். விகாரைக்கு சொந்தமான சொத்துக் களையும் தருவதாக ஒப்புக் கொண்டான்.

**6** இந் நிலையில் போர்த்துக்கேயரின் நடத்தைகளால் வெறுப்புற்ற மக்கள் சீதாவாக்கைக்குச் சென்றனர். இதனால், கோட்டே நிர்வாகிகள் கிறிஸ்தவ மதத்தைத் தழுவும் முயற்சியை சிறிது காலத்திற்குத் தள்ளி வைத்தான். இந்நிலையில் கோட்டைப் படைப்பிரிவு சீதாவாக்கை நோக்கிப் படையெடுத்துச் சென்றது செல்லும் வழியில் வழிநெடுகவுள்ள காவலரண்களைத் தீயிட்டு கொளுத்தினர்.

**7** இவர்களை எதிர்கொண்டு சீதாவாக்கை படைகளும் முன்னேறி வந்தன. இரு படைகளுக்குமிடையில் பெரும் போர் நடைபெற்றது. நீண்ட நாட்களாக நடைபெற்ற இப்போரின் பின் சீதாவாக்கை படைகள் பின்வாங்கிச் சென்றன. இதனால், மாயாதுன்னை மன்னன் கலவரமடைந்தான். சமாதானம் பேசுவதற்காக தூதுவன் ஒருவனைக் கோட்டேக்கு அனுப்பினான். இதற்கு விருப்பப்படாத கோட்டேப் படைகள் சீதாவாக்கை நோக்கிச் சென்றன.

**8** சீதாவாக்கை நகருக்குள் கோட்டேப் படைகள் நுழைந்தன. நகர் முழுவதும் பாழடைந்தது போல் காணப்பட்டது. நகரில் வாழ்ந்த மக்கள் அனைவரும் தமது வீடு வாசல்களைக் கைவிட்டுக், கோட்டே படைகளுக்குப் பயந்து தப்பியோடியிருந்தனர்.

(தொடரும்..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்திரம்

கதை, சித்திரம்

திசா

08




## துருவக் கரடி

துருவக் கரடிகள், ஆர்க்டிக் எனப்படும் வட துருவப் பகுதிகளில் தான் அதிகம் காணப்படுகின்றன. அவை வெள்ளை நிறத்தில் இருக்கும். இவை பனிக்குகைகளில் தான் குட்டிகளைப் போடும். ஒரே நேரத்தில் மூன்று குட்டிகள் வரை போடும். குட்டிகள், முதல் மூன்று மாதங்கள் வரை பாலூக்காகத் தாய்க் கரடியைச் சார்ந்தே இருக்கும். பாலூட்டும் அந்த மூன்று மாதகாலத்தில் தாய்க்கரடி உணவே சாப்பிடாது.



## கரீபு



கரீபு எனப்படும் ரெய்ன் வகை மான்கள், பெரும்பாலும் வடதுருவப் பகுதிகளில்தான் காணப்படும். அவற்றின் கொம்புகள் பல கிளைகளுடன் பார்க்க மிகவும் அழகாக இருக்கும். வருடத்துக்கு ஒருமுறை அந்தக் கொம்புகள் கீழே விழுந்து புதிய கொம்புகள் முளைக்கும்.

# உங்களுக்குத் தெரியுமா?

வேணு வாரியத்

## மாக்கரோனி பெங்குயின்

மாக்கரோனி பெங்குயின்கள் மயில்களைப் போல் அழகாக நடனம் ஆடும் திறன் படைத்தவை. அவை, கற்களாலும் வேறு சிலவற்றாலும் கட்டப்பட்ட தங்களது கூடுகளின் மீது நின்று நடனம் ஆடும்.



## மாறும் வண்ணங்கள்



துருவப் பகுதிகளில் வசிக்கும் பெரும்பாலான விலங்குகளின் உடலில் உள்ள மிருதுவான ரோமங்களின் வண்ணம், காலநிலைக்கு ஏற்பமாறும் தன்மை கொண்டது. குளிர்காலத்தில், ரோமங்கள் பனியைப் போன்று வெள்ளை நிறத்தில் இருக்கும். கோடை காலத்தில் அவை பழுப்பு நிறத்தில் இருக்கும். எதிரிகளிடம் இருந்து தங்களைக் காத்துக் கொள்ள இத்தகைய இயல்பை அவற்றுக்கு இயற்கை அளித்துள்ளது.

## லெம்மிங்

லெம்மிங் எனப்படும் ஒரு வகை அணில், துருவப் பகுதிகளில் காணப்படும். அவை ஒரே நேரத்தில் 8 குட்டிகளைப் போடும். அதுவும் ஒவ்வொரு 5 வாரத்துக்கு ஒரு முறையும் குட்டிகளைப் போடும் திறன் கொண்டது. இந்த லெம்மிங் வகை அணிலின் விருப்பமான உணவு பனி ஆந்தை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, ... 2006 ஜூன் மாதம் 28ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on June 28, 2006